தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 7 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1991, ஆனி 5 (18-6-'60). சனிக்கிழமை | இதழ் 1

௨௨-6-'54!

அன்றுதான் "தென்றல்" பிறந்தது.

18-6-'60!

ஆறு ஆண்டுகள் முடிந்து விட்டன.

இன்று ஏழாம் ஆண்டு தொடங்குகிறது.

பொதியைத் தென்றல் விளையாடும் பூமியில், கவிதைத் "தென்றல்" உலா வந்தது. எதிர்கொண்டழைத்தது, தாயகம்; எல்லா வழிகளிலும் உதவியது திராவிடம்!

தீயோர் பொய்யால் புனைந்த தம் பழிச்சொற்களால் "தென்ற"லின் தொண்டினைத் தடுத்து நிறுத்திடத் துடித்தனர். அப்போதெல்லாம் "தென்றல்" புயலாகி விட்டதும் உண்மை! புயலானபோதும் திராவிடத்தார் தென்றலை மறக்கவில்லை.

புயலாகியிருக்காவிட்டால், வடக்கெல்லைச் சூதாட்டக்காரர்களின் தாலியை அறுத்திருக்க முடியாது. பிற பல தீயோரின் பொய் மாளிகைகளை நொறுக்கியிருக்கமுடியாது. எனவே, "தென்றல்" புயலானதையும் மக்கள் ஏற்றுக் கொண்டனர்; வாழ்த்தினர்.

இயக்க ஏடுகளில் நகைச்சுவைக்கெனத் தனியிடத்தைப் பெற்றது "சிரிப்புத்தான் வருகுதய்யா!" சிரிப்பு வந்தபோதெல்லாம் தோழர்கட்குத் தெரிவித்தோம். அவர்களும் சிரித்து மகிழ்ந்தார்கள். எதிரிகள் மட்டும் அழுது ஒழிந்தார்கள்.

பன்மொழிப் புலவர் 'தென்ற'லில் எழுதிய தொடர் கட்டுரைகளும், வேறு பல கட்டுரைகளும், தமிழிலக்கியத்தில் ஒரு புதுப்பாதையைத் திறந்துவைத்தன என்றால் தவறில்லை. அவரிடம் "கேள்விப் பெட்டி" மூலம் தொடர்பு கொண்டவர்கள், கொண்ட தெளிவுக்கு எல்லையில்லை. அவர் ஐயம் அகற்றிய போதும் தோழர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை.

தொடர்கதைகள் பல உங்கள் நெஞ்சைத் தொட்டன; மகிழ்ந்தீர்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாகக் கவிதைத் துறையில் 'தென்றல்' கொண்ட ஈடுபாடு அளவிறந்தது. வெண்பாப் போட்டியையும் விருத்தப் போட்டியையும் நீங்கள் விரும்பி வரவேற்றதை நாங்களும் அறிவோம்.

"கற்பனை வானில் சிறகடித்துப் பறக்கும் இளங் கவிஞர்கள் இத்தனை பேரா?" என்று தமிழ்ப் பேராசிரியர்கள் வியந்து பாராட்டுமளவுக்குப் பல தோழர்கள் தம் திறமையைக் காட்டினர். அத்தனை பேருக்கும் நம் வாழ்த்துக்கள்!

எல்லோரும் மகிழ நல்லோவியங்கள் பலவற்றைத் தீட்டித் தந்த இந்த இளம் வித்தகர்கள்தான், இன்னும் ஆயிரமாயிரம் கவிதைக் கனிகளைத் தரத் துடிக்கின்றனர்.

போதிய வசதியும் பொருளும் அற்ற நிலையில் ஏழையர் இயக்கத்தின் கொள்கைகளைவலியுறுத்திவரும் "தென்றல்", ஆறு ஆண்டுகளைக் கடந்துவிட்டது என்றுநினைக்கும்போது நமக்கேவிந்தையாயிருக்கிறது. "நமக்கு அத்தனை பலமா?" என்று வியப்பாயிருக்கிறது.

**தென்றலின் தொண்டு,
தீயோர்க்கு வெடிகுண்டு!**

மும்முனைப் போராட்டத்தின் வெடிச் சத்தம் அடங்கிய சற்று நேரத்தில் பிறந்த "தென்றல்", தனது ஏழாமாண் [illegible] போராட்ட நெருக்கடியில் தொடு [illegible]

[illegible] தையும் கொடுமையையும், [illegible] றையையும், ஆணவத்தை [illegible] த்துக்கொண்டு வந்து [illegible] மன்னம் பட்டதெல் [illegible] ம்!

[illegible] வாழும் இந்தியத் துணைக்கண்டத்தில் பதினுன்கு மொழிகள் தேசிய மொழிகள் என்று சொல்லப் படுகின்றன. ஏறத்தாழ மூன்று கோடியே எழுபத்தைந்து இலட்சம் மக்கள் பேசும் தமிழும் தேசிய மொழிகளுள் ஒன்று என்று ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. எழுத்தளவில், பேச்சளவில் ஒப்புக்கொள்ளப்பட்ட தமிழுக்கு, செயலளவில் துளியும் இடம் இல்லை! இந்தி பொறிக்கப்படும் இடங்களிலெல்லாம் தமிழிலும் எழுத வேண்டுமென்றால் இடமில்லை என்கிறது தில்லிக் கொற்றம். நாமும் நம்பவோ?

அண்டையிலே இருக்கும் சின்ன சிங்கப்பூர் தமிழுக்குத் தரும் மரியாதையைக்கூட, இந்தியத் துணைக்கண்டத்தார் தர மறுக்கின்றனர். செலவுகள் பெருகும் என்ற தப்பான காரணங் காட்டித் தப்பிக்கப் பார்க்கிறார் தில்லி அமைச்சர் ஒருவர். அவர்களைப் பார்த்துச் சிரிக்கிறது சிங்கப்பூர் தெருப் பலகை!

சிங்கப்பூரில் தெருப் பெயர்கள்கூடத் தமிழிலும் எழுதப்படுகின்றன. அங்கு வாழும் பல இனத்து மக்களின் மொழிகளும் மதிக்கப்படுகின்றன. கடற்கரைச்சாலை என்பதைத் தமிழிலும் எழுதியிருப்பதைப் பார்க்கட்டும்! அந்தந்த மக்களின் தொகை மதிப்புக்கு ஏற்ப அங்கே பேசப்படும் மொழிகள் வரிசைப்படுத்தப்பட்டு எழுதப்படுகின்றன.

சின்னச் சிங்கை அந்தச் செலவினங்களைத் தாங்கமுடியும்போது, பெரிய இந்தியா தாங்கமுடியாது போனதெப்படி?

மொழி ஆதிக்கம் என்பதைத் தவிர வேறென்ன காரணம் காட்டமுடியும்? இப்படத்தை அனுப்பிவைத்த நண்பர். திருக்கோட்டியூர் நா. கதிரேசன். அவரே கேட்கிறார், இப்படி.

தென்னகமெங்கும் இப்படி உணர்ச்சிகள் வெடிப்பதைக் கண்ட பின்பும் வடவர் கொத்துகின்றனர்; நம்முடன் விளையாடுகின்றனர்.

தென்னகமெங்கும் "இந்தியை எதிர்த்தேயாக வேண்டும்! அதன் உயிரை அழித்தேயாக வேண்டும்!" என்ற எண்ணம் கொழுந்துவிட்டெரிகிறது!

இன்றும் நாளையும் கூடும் நம் பொதுக்குழு இதைப்பற்றித் தக்கதொரு முடிவெடுக்கவும் இருக்கிறது! அது வகுத்துத் தரும் போராட்டப் பாதைகள் நமக்கு வெற்றியின் கதவுகளைத் திறந்துவிட இருக்கின்றன.

எதிர் வரும் போராட்டம், இத்தனை நாளும் நாம் சந்தித்த போராட்டங்களைவிடப் பெரியதாய், வலியதாய் அமையப் போகின்றது!

நெருக்கடியான இந்த நிலையில் ஏழாமாண்டில் அடி எடுத்து வைக்கும் "தென்றல்", தனது பணியை, இனி மேலும் வலிவுள்ளதாக்கும்!

இந்தியை எதிர்த்தழித்திடவும், தாயக விடுதலையைப் பெற்றிடவும் இன்னும் வலிய முறையில் "தென்றல்" உழைக்கும்!

இத்தனை நாளும் தென்றலின் உழைப்புக்கு உதவிய எழுத்தாளத் தோழர்கள், விற்பனையாளர்கள் முதலியோர்க்கு எங்கள் வாழ்த்துக்கள்!

தென்றலை உருவாக்கிக் காலத்தே தந்துதவும் தொழிலாளத் தோழர்கள், இந்த திராவிட சமுதாயம் வழங்கும் வாழ்த்து மழையில் திளைக்கிறார்கள்!

வாழ்த்தியோருக்கெல்லாம் வணக்கம் தெரிவித்து. வாழத் துடிப்போருக்கெல்லாம் ஆதரவு தந்து, என்றும் கடமையாற்றும் உங்கள் தென்றல். ✶

கிழக்கும் மேற்கும்



கிழக்கைக் கீழ்திசை என்றும், மேற்கை மேல்திசை என்றும் தமிழர்கள் ஏன் குறிப்பிட்டார்களோ, இன்று நம்மால் தெளிவாகக் கூற முடியாது. ஆனால் இன்றைய நாகரிக உலகின் நிலைகாண அது பொருத்தமாய் அமைந்துள்ளது என்பதில் ஐயமில்லை.

இன்று மேற்கு ஆண்ட, ஆளுகிற திசை. கிழக்கு ஆளப்பட்ட, இன்னும் ஆளப்பட்டே வருகிற திசை. மேற்கு செல்வ வளமும், வாழ்க்கை வளமும் மிக்கது. கிழக்கு வறுமை, வறட்சியிலிருந்து அதைப் பின்பற்ற முயல்கிறது. தொழில்வளம், அறிவுவளம், கலைவளம், இலக்கியவளம் ஆகியவற்றிலும் மேற்கு மேட்டு நிலமாக விளங்குகிறது. அங்கே வளர்ந்து வளந்தந்து பொங்கிவழியும் செல்வமும் அறிவும் நாகரிகமும் கசிந்து கசிந்து கீழ்திசைக்குச் சிறிதும் பெரிதுமாக வாழ்வு தந்துகொண்டிருக்கிறது. அத்துடன் உயிர்ப்பும் துடிப்பும் வளர்ச்சியும் மேல்திசைக்கே உரியதாகின்றன. கீழ்திசையில் அவற்றின் நிழலாட்டத்தையே நாம் காணமுடிகிறது.

எந்தத் துறையிலும் மேல்திசையின் வளர்ச்சி மயிலின் ஆட்டம் போன்றது கீழ்திசையின் வளர்ச்சி அதைப் போலியாகப் பின்பற்றும் வான்கோழியாட்டத்தை ஒத்தது என்று கூறுவது தவறன்று.

மேல்திசை என்று நாம் கூறுவது பெரிதும் ஐரோப்பாக் கண்டத்தைத்தான். உலகின் ஐந்து கண்டங்களில் அது ஒரு சிறிய கண்டம். ஆனால் மற்ற நான்கு கண்டங்களிலும் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஆபிரிக்கா ஆகிய மூன்று கண்டங்களும் இன்று பெரிதும் மேலையுலகுக்கே சொந்தமாகிவிட்டன. அங்கெல்லாம் நிலையாகக் குடியேறி மேலையுலக 'வெள்ளையரே' அக்கண்டங்களின் நிலையான உரிமைக் குடிகளாகிவிட்டனர். மீந்த உலகின் ஒரே கண்டம் உலகின் மிகப் பெரிய கண்டமான ஆசியா - அதுவும் மேலையுலகின் ஆட்சி, வாணிகம், தொழில் ஆகியவற்றுக்குரிய வேட்டைக்களமாகியுள்ளது. மேலை மொழிகள், இலக்கியங்கள், மேலையுலகக் கல்வியறிவே இவற்றை இன்னும் ஆட்கொண்டுள்ளன, ஆட்கொண்டு வருகின்றன.

இன்றைய உலக நாகரிகம் முற்றிலும் மேல்திசை நாகரிகம்தான். இன்று மேற்கு கிழக்கு என்பதன் வேற்றுமையெல்லாம் மேற்கு வளருகிறது-கிழக்கு அது வளர்ந்த வளர்ச்சியைப் பின்பற்றி அடியெடுத்து வைத்து அளக்கிறது என்பதுதான். தவிர நான்கு கண்டங்களுமளாவியிருந்த கீழ்திசையுலகு இப்போது ஆசியா என்ற ஒரு கண்டத்தில்தான் இப்படி நிழலுருவில் இன்னும் இருந்து வருகிறது.

கீழ்திசை நாகரிகம், ஆகிய நாகரிகம் இப்படி மேல்திசை நாகரிகத்தின் நிழலில் மங்கி மறுகித் தேய்வுற்று அழிந்துவிடுமா? அதற்கு ஓர் எதிர்காலம் உண்டா?

வரலாறு அறியாதவர்கள் உலக நாகரிகம் என்பது மேல்திசை நாகரிகந்தான் என்று கூறிவிடுவர். இது இயல்பு. இன்றைய நிலைமட்டும் காண்பவர் கொள்ளத்தரும் முடிவும் இதுதான். ஆயினும் வரலாறறிந்தவர் உலகில் இன்றும் கீழ்திசையை மறந்துவிடவில்லை. கிறிஸ்தவமதம் உட்பட உலக மதங்கள் யாவும் கீழ்திசை-சிறப்பாக ஆசியா, உலகுக்குத் தந்தவையே. இன்றைய உலகின் இலக்கியம், கலைகள், அறிவியல் நூல்கள், தொழில்வளம், நாகரிகம் ஆகிய யாவும் கீழ்திசையில் பிறந்து மேல்திசையில் வளர்ந்தவையே.

நானூறு ஆண்டுகளுக்குமுன் மேலையுலகினர் அமெரிக்காக் கண்டத்தைக் கண்டுபிடித்தனர். இருநூறு ஆண்டுகளுக்குமுன்தான் ஆஸ்திரேலியாக் கண்டத்தைக் கண்டடைந்தனர். இரண்டும் இந்தியாவை - தென்னகத்தை - கடல்வழி வந்து அடையும் ஆசையால் மேலையுலகம் திரிந்த திரிச்சலின் வழிச்சறுக்கல்களே

பன்மொழிப் புலவர்
★ கா. அப்பாத்துரையார் ★

யாகும். இதன் சின்னமாக இன்றும் அமெரிக்கத் தீவுகள் மேலைஇந்தியா என்றும், தென்கிழக்காசியத் தீவுகள் கீழை இந்தியா என்றும் அழைக்கப்படுகின்றன. அமெரிக்கப் பழங்குடி மக்கள் செவ்விந்தியர் என்றுதான் பெயர் பெறுகின்றனர்.

செல்வமிக்க கீழ்திசையில் - சிறப்பாகச் செல்வங் கொழிக்கும் தென்னகத்தில் - வாணிகம் செய்து வளம் பெறத் துடித்துப் போர்ச்சுசீசியரும் டச்சுக்காரரும், பிரஞ்சுக்காரரும் ஆங்கிலேயரும் வந்த காலத்தில் - நானூறு ஆண்டுகளுக்கு முன்னால், உலகில் மேல்திசை செல்வம்,கல்வி, அறிவு, கலை, நாகரிகம் ஆகிய எல்லாத் துறைகளிலும் வறுமைப்பட்டிருந்தது. கீழ்திசை - சிறப்பாகத் தென்னகம் - இன்று அமெரிக்காவும் உருசியாவும் இருக்கும் நிலையினும் பன்மடங்கு மேம்பட்டிருந்தது. கீழ்திசை மக்கள் அன்று தங்கம் வைரம் வெட்டியெடுத்தனர். மேல்திசையோ அவை மரத்தில் காய்க்கின்றன என்று அன்று கருதியிருந்தது! கீழ்திசையாளர் அன்று வகை வகையான

உணவு சுவைப்பொருள்கள், சமையற்கலை, பருத்தியாடை, பட்டாடை, பொன்னணிமணி வகைகள், இன்ப வாழ்க்கைப் பொருள்கள், ஏழடுக்கு மாடிகள், நாடு நகரங்கள், கலையிலக்கியங்கள், அறிவுநூல்கள், யாழ்குழல் முதலிய இன்பக்கருவிகள் உடையவர்களாய், உயர்நாகரிகச் செழிப்புடையவராயிருந்தனர். மேல்திசையினரோ இவை ஒன்று பற்றியேனும் பெயர்கூடக் கேட்டறியாதவராயிருந்தனர்.

ஊர்திகள், கப்பல்கள்; சுவை மணப் பொருள்கள்; ஆடையணிமணிகள்; கைத்தொழில்கள்; கல்வி; கலை எல்லாவற்றையும மேலைநாட்டினர் கீழ் திசையிலிருந்து நானூறு ஆண்டுகளுக்குள்ளே பெற்று வளர்த்துக்கொண்டனர். கீழ் திசை ஆட்சியையும் செல்வத்தையும், மொழியுரிமைகளையும் வாழ்க்கையுரிமைகளையும் இழந்து மேல் திசையின் நிழலாகத் தலைப்பட்டது சென்ற நானூறு ஆண்டுகளுக்குள்ளாகத்தான்.

வளந்தந்தது கீழ் திசை. அது வளமிழந்து மறுகுகிறது. வளமற்றது மேல் திசை. அது மேன்மேல் வளர்கிறது. இந்நிலை வேறு

பாடு கண்ட மேலையறிஞர்தான் இன்றைய வளமுடைய மேலை நாகரிகத்துடன் சரி சமமாக, வளமூற்றாக நிலவிய கீழை நாகரிகத்தையும் வைத்து, கிழக்கு மேற்கு என்று இன்றும் பேசி வருகின்றனர். ஆயினும் கிழக்கு கீழ் நிலையுடையதுமட்டுமலல, கிழத்தனம் உடையது. மேற்கு மேல் நிலையுடையது மட்டுமல்ல; இளமை உயிர்ப்புடையது என்று மேலையறிஞர் எழுதி வருகின்றனர்.

இக்கருத்து முற்றிலும் தவறானது மலல. ஆனால் முற்றிலும் சரியானது மல்ல.

மேற்கை நோக்க, கிழக்கு பழமையானதுமட்டுமல்ல-மிக மிக நீடித்த பழமையுடையது. அது கிழத்தனம தட்டிவிட்டது என்று கூறத்தக்க அளவு நீண்ட வாழ்வு வாழ்ந்துள்ளது என்பதிலும் ஐயமில்லை. கீழையுலக வாழ்வின் அருகே மேலையுலக நாகரிக வரலாறு ஒரு புள்ளி-ஒரு கணநேர வரலாறேயாகும். ஆயினும் நீடித்த வாழ்வு காரணமாகவே [illegible]து கிழடு தட்டிவிட்டது என்ற க[illegible]த ஆழ்ந்த கீழ் திசை [illegible]சி பொய்ப்பித்துவிடும்.

கிழத்தனம் நீடித்[illegible]ரியதுமன்று-அது [illegible]கு

திசைகளுக்குரியதுமன்று. அது ஒரு நோய்போன்றது. மேல் திசையிலும் கிரேக்க உரோம நாகரிகங்கள் இக்கிழத்தனத்துக்கு ஆட்பட்டதுண்டு. கீழ் திசையிலும் சீன, தமிழ் நாகரிகங்கள் இதற்கு முற்றிலும் ஆடப்படாமல் இயல்வது காணலாம்.

கீழ்திசை, மேல் திசை நாகரிகங்களை ஒப்பிட்டு உயர்வு தாழ்வு காண்பவர் மேல் திசையின் தனிப் பண்பு என்று அவர்கள் கருதிய இந்த இளமைப் பண்பை விளக்க முயன்றுள்ளனர். ஆனால் அதன் பண்புகளை அவர்கள் விளக்குகின்றனரேயன்றி, தோற்ற வளர்ச்சிக் காரணங்களை விளக்க முடிவதில்லை.

கிழக்கு, மேற்கு என்ற நாகரிக உலகப் பிரிவினையில் உள்ளீடாக ஒரு தவறு உண்டு. அவற்றின் வேறுபாடும் உள்ளார்ந்த உயிர் வளமும் இன்றும் காணப்படாதிருப்பது இத்தவறின் பலனேயாகும்.

உலக நாகரிகம் ஒன்றுதான். அதில் கிழக்குமில்லை, மேற்குமில்லை. ஆனால் அந்நாகரிகத்தின் உள்ளீடாக நாம் ஓர் உயிர் நாகரிக ஊற்றையும், அதன் வளம் தடுக்கும் ஒரு தேக்க அழிவுக் கூற்றையும் காணலாம். உலகில் இந்த உயிர் நாகரிக ஊற்றை நாம் மேலை நாகரிகம் என்கிறோம். தேக்க அழிவுக் கூற்றைக் கீழை நாகரிகம் என்கிறோம். ஒரே நீர் நிலையில் வெயில் நிழல்பட்ட இடங்கள் போன்றதே இந்த வேற்றுமை.

கீழ் திசையிலும், சிறப்பாக இந்தியாவில்-கிழக்கு மேற்கு என்ற வேறுபாடே வடக்குத் தெற்கு எனத் திசைமாறி இயல்கிறது. உலக நாகரிகத்தின் தூய உயிரூற்றாகத் தென் திசையும் தமிழின நாகரிகமும் இயல்கின்றன. தேக்க அழிவு நோய்க் கூறாக, அதன் வளர்ச்சியைத் தடை செய்யும் பிற்போக்குச் சக்தியாகவே வடக்கு விளங்குகிறது.

தென் திசை இங்ஙனம் திசையில் கிழக்காயிருந்தாலும் வரலாற்றிலும் பண்பிலும் கீழ் திசையைவிட மேல் திசையுடன் நீடித்த, நெருங்கிய தொடர்புடையதாய் இயங்குகிறது. அத்துடன் அதுவே கீழ் திசை நாகரிகத்தின் தலையூற்றாகவும் திகழ்கிறது.

இந்திய நாகரிகத்துக்கும் சீன நாகரிகத்துக்கும் தலையூற்றாக விளங்கிய புத்த சமண நெறிகள் தமிழ் இனப் பண்பிலிருந்தே வளர்ந்தன. அதுபோல, மேலை நாகரிகத்தின் தலையூற்றான நடு நிலக் கடலக நாகரிகத்துக்குத் தூண்டுதல் தந்து வளர்த்ததும் தமிழ் நாகரிகமே!

தமிழ் உண்மையில் கீழ்திசை மொழியுமன்று, மேல் திசை மொழியுமன்று. தமிழகம் உலகின் கிழக்கும் மேற்கும் தெற்கும் வடக்கும் கிளைகளாகக் கொண்ட உலகின் மைய உயிர் நிலத்தாயகமேயாகும். அது மீண்டும் அவ்வாறு செயலாற்றத் தொடங்கும் நாள் தொலை தூரத்தில் இல்லை. ஆனால் அவ்வாறு செயலாற்றத் தக்க தங்குதடையற்ற உரிமையை மொழிக்கும இனத்துக்கும் பண்புக்கும் வழங்க இன்றைய உலகம் முற்பட வேண்டும். உலகுக்கு அது ஒரு புது மலர்ச்சியளிக்கும் என்பதில் ஐயமில்லை. ★

வாழ்க! வாழ்க!

தேவகோட்டை இதயமணி அவர்களின் சகோதரர் தோழர் நடராசன் அவர்கள், தோழியர் அன்னவடிவு அவர்களை 6-6-60 அன்று இராசபாளையத்தில் மணந்தார்.

புதுமணமக்களுக்கு நம் வாழ்த்துக்கள்! ஆ—ர்.

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 7 | 18-6-'60 | இதழ் 1

தமிழகமே! எழுந்து நில்! தாக்கும் பகையைத் தாக்கிக் கொல்!

வெங்காயக்கருப்பன் தனக்கு வீராதி வீரன் என்று பட்டயம் கட்டிக் கொண்டானும்!

சாமரம் வீசி, தன்னை செங்கோலோச்சி என்று சொல்லிக்கொண்டானும்!

பொய்மூலாம் பூசி, போலி ஒளி வட்டத்தில் திளைக்க முனையும் இந்த அறிவிலிகள், தம்மையும் ஏமாற்றிக்கொள்கின்றனர்; ஊரையும் ஏமாற்றுகின்றனர். ஊரை மயக்க இவர்கள் எடுத்துக்கொள்ளும் எண்ணற்ற தீயமுயற்சிகளுள் ஒன்றே, அண்மையில் லோகியா எனும் வெறியுருவம் இங்கு வந்து போனதாகும்.

இந்திக்கு மெருகு பூச இந்த லோகியாவானாலும் சரி: எந்தக் கொம்பனானாலும் சரி, முடியவே முடியாது! அறிவோம்!

இந்தி இந்த நாட்டுக்கு ஏற்றதில்லை என்றும், அது தென்னகத்தாரை அடிமைப்படுத்தும் கருவி என்றும், இந்தியத் துணைக்கண்டத்தின் பிற மொழிகளை அழிக்க இவர்கள் எடுத்துக்கொண்ட கொடிய முயற்சியே இந்தித் திணிப்பென்றும், இந்தியின் வால் ஒட்ட நறுக்கப்பட்டால்தான் நல்வழியும் நிறை அமைதியும் தென்னகத்தில் தழைக்கும் என்றும், நாம் ஆயிரமாயிரம் மேடைகளிலே சொல்லியிருக்கிறோம். அத்தோடு இந்த வெங்காயக்கருப்பர்களின் பிரதிநிதிகள் வந்தபோதெல்லாம் தெரிவித்திருக்கிறோம். என்றாலும், உணராத மந்தமதியினராய்த் திரிகின்றனர், கொழுத்த வடவர். அந்த ஆணவத்தின் ஒரு பகுதியே லோகியாவின் உருவம்!

காட்டிலே திரிய வேண்டிய உருவம் மேடையிலே ஏறியிருக்கிறது; தமிழகத்தாரைப் பார்த்து ஏசிக் குலைத்திருக்கிறது!

ஆவின் பாலில்தான் சுவையிருக்கும். நச்சுச் சாற்றிலே அஃதில்லை. இந்த உண்மையை நன்கு உணர்ந்த நாம், இதனையே லோகியாவின் கூற்றுக்களிலும் பொருத்திப் பார்க்கிறோம். லோகியா போன்ற வடவர் நெஞ்சில், வெறித்தனம்தான் இருக்கும் என்பதை நாம் நன்கு அறிவோம். என்றாலும் தமிழகத்தாரின் வெறுப்புணர்ச்சியை எழுத்து மூலம் தில்லி ஏகாதிபத்தியத்திற்குத் தெரிவிக்கவே, பல முறை சொன்ன இந்தக் கருத்துக்களை எழுதுகிறோம்.

லோகியாவின் வெறியை அப்படியே வடித்து வைத்ததுதான், அவர் வைத்திருக்கும் பதினறு அம்சத் திட்டம் எனப்படுவது. இந்தப் பதினறு அம்சத் திட்டங்களுள் ஒன்று. ஆங்கிலத்தை முழுக்க முழுக்க இந்தியத் துணைக் கண்டத்தை விட்டு விரட்டலாகும்! தான் பிறந்த வடக்கின் இந்தி வாழவும். ஆளவும் வேண்டுமென்பதற்காக, இவர் மேற்கொண்ட கொடிய திட்டம்தான், ஆங்கிலத்தை அறவே நீக்கல்!

அவரது பதினறு அம்சத் திட்டங்களுள் ஒன்று, இந்தியை எல்லாத் துறைகளிலும் நிலைநாட்டல். அந்தப் பதினறுள் முதலாவதான மற்றொரு திட்டம், இந்தியத் துணைக்கண்ட ஆட்சியை மூன்று ஆண்டுகளில் கைப்பற்றுதல். இந்தியை எல்லாத் துறைகளிலும் நிறுவ வேண்டுமென்று வெறிபிடித்த இவர்; தன் கொள்கைகளை எடுத்துச் சொல்ல நடத்தும் ஏட்டின் பெயரே "MAN KIND" என்பதாகும். அவ்வாங்கில ஏட்டின் மூலம்தான் தனது கருத்துக்களைப் பறைசாற்ற வேண்டிய இழிநிலையடைந்துவிட்ட லோகியா, நம்மைப் பார்த்துப் பொல்லாதன போதிக்கிறார். அவரது முதல் திட்டமான மூன்றாண்டுகளில் ஆட்சியைக் கைப்பற்றுதல் அடைந்த கதியையும் அறிவார்கள் பொதுமக்கள்!

லோகியாவின் வெறிக் கூத்து, தமிழகத்திலே அளவுகடந்து நடந்திருக்கிறது! கடந்த ஆண்டு கோகலே மண்டபமே காலியானது, லோகியா இந்தியில் தான் பேசுவேன் என்று பிடிவாதம் பிடித்ததால்! காலியான மண்டபத்தை, நாற்காலி வரிசைகளைப் பார்த்துப் புலம்பினார்; அமர்ந்தார். முன்னம்பட்ட அந்தப் பாடத்தை மறந்தவர்போல் கரூரிலே இப்போது கொக்கரித்தார். கண்டனம் தெரிவித்த தோழர்கள் கைது செய்யப்பட்டனர். கோவையிலாகிலும் அவர் தன் போக்கை மாற்றிக்கொண்டிருக்கலாம். ஆனால் வெறி மிகுந்த லோகியா, விடாப் பிடிவாதத்தைக் காட்டியிருக்கிறார். வடவரின் கொடுங்கோலை உணர்ந்த தென்னகத்தார், வடக்கின் வாடை தமிழக மேடைகளில் வேண்டாம் என்று கூறியிருக்கின்றனர். என்றாலும் லோகியா நம்மைக் குத்திவிட்டு வேடிக்கை பார்த்திருக்கிறார். மரியாதை, கொடுக்கப்பட்டு வாங்கப்படும் ஒன்று என்பதை மறந்தார் போலும். மக்களைப் பார்த்து, சோடாப் புட்டியை வீசி எறிந்திருக்கிறார். காக்கை குருவிகளைக் கலைக்கக் கல்லை எடுத்து எறிவதுபோல, மக்களைக் கலைக்க சோடா புட்டியை வீசி எறிந்திருக்கிறார். பின்தான் மக்கள் காக்கை குருவிகளில்லை என்பதை உணர்ந்திருக்கிறார். பட்ட பின்னேதான் இவருக்குத் தெரிந்திருக்கிறது, பழந் தமிழன் வீரம்! ஆனாலும் உணரத் தவறியவர்போல், சென்னை ஐயனாவரத்திலும் பேசியிருக்கிறார், இந்தியில். ஐயனாவரத்தில் இரண்டு நிமிடம்கூடப் பேசமுடியாது திண்டாடிப் போன அவர், இனியாகிலும் தென்னவர் உணர்வை மதிக்கப் பழகட்டும்! தென்னகப் பொதுமக்கள் எப்படிக் கடமை காத்திருக்கின்றனர் என்பதை, தன்னை அனுப்பி வைத்த வடவர்கட்குச் சொல்லட்டும்.

தோழர்கள் மற்றொன்றையும் ஊராருக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றனர். நெல்லை "தினமலர்" தவிர, பிற ஏடுகள் பலவும் கோவை நிகழ்ச்சியின் அடிப்படையை மறைத்து விட்டன. காந்தியாரின் அறநெறியினைக் கற்று உணர்ந்தவரெனவும், ஒரு காலத்தில் காந்தியாரோடு தோளோடு தோள் நின்று பாடுபட்டவர் என்றும் லோகியாவுக்கு சில ஏடுகள் பெருமை பாடுகின்றன. ஆனால் அந்த லோகியா கோவை மக்களை நோக்கி, சோடாப் புட்டியை எறிந்திருந்திருக்கிறார். அதுவரை சொல்லையே பயன்படுத்திக்கொண்டிருந்த மக்கள், பின்னர் கல்லையும் பயன்படுத்தத் தொடங்கியிருக்கின்றனர். யார் மீது குற்றம்? ஏடுகள் பலவும் இதை மறைத்ததேன்?

வடநாட்டில் ஆச்சாரியார் மீது செருப்பு எறிந்ததைப் பெரிதுபடுத்தின இந்த ஏடுகள், "ஆச்சாரியாருக்கு வடநாட்டிலும் மதிப்பில்லை" என்ற ஓர் எண்ணத்தை வலிவுபடுத்திப் பரப்ப வேண்டுமென்று துடித்தன. எந்த இந்தியால் ஆச்சாரியாரின் மதிப்பைக் குலைக்க முனைந்தனவோ, அதே இந்தியால் லோகியா துன்பப்பட்டிருக்கிறார்; அவமானப்பட்டிருக்கிறார். இதை உள்ளபடியே வெளியிட்டால் இந்திக்குத் தமிழ் நாட்டில் உள்ள எதிர்ப்பு வெளிப்பட்டுவிடுமாம்! லோகியாவின் தரந் தாழ்ந்து விடுமாம், அவரது அநாகரிகச் செயலால்! அதனால் மறைத்து விட்டனவாம், வெங்காயங்கள்!

எவ்வளவுதான் நீங்கள் மறைத்தாலும், இங்கு வளர்ந்திருக்கும் இந்தி எதிர்ப்பு உலகிற்குத் தெரியத்தான் போகிறது! ஏற்கனவே அண்டை நாட்டினர்கள் சிலர் தெளிவாக அறிந்து விட்டனர். இனி நீங்கள் **எந்தக் குடையைப் பிடித்தாலும் கதிரவனை மறைக்க முடியாது.**

இந்நிகழ்ச்சிகளைப் பற்றி வெளியான இரண்டு அறிக்கைகள் நம் கவனத்திற்கு உரியனவாகின்றன.

செய்வதெல்லாம் செய்துவிட்டு, விளக்கவுரை வேறு ஆற்றுவது போல லோகியா அறிக்கை வேறு விட்டிருக்கிறார். "ஆங்கிலத்தைத்தான் வேண்டாமென்கிறேன். ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்திதான் வரவேண்டுமென்றில்லை. அந்த இடத்தில் உங்கள் தமிழ் அமர்ந்தாலும் ஏற்றுக்கொள்வேன்! நம் மொழிகள் இருக்க வேண்டிய இடத்தில் வெள்ளையனின்—வெளி நாட்டானின் ஆங்கில மொழி இருக்கலாமா? அந்த வெளிநாட்டான் மொழிக்குப் பதில் தமிழ் வருதல் கூட நலம்!" என்று சாகசப் பாகு தடவிய தீய மொழிகளைச் சுழல விட்டிருக்கிறார்.

ஆங்கிலம் மட்டும் வெளிநாட்டாரின் மொழியாம்! வடிகட்டிய மூடனின் போக்கில் தலைவர்கள் பேசலாகாது! தென்னகத்தார்க்கு ஆங்கிலம் எந்த அளவு வெளிநாட்டு மொழியோ, அதே அளவு இந்தியும் வெளிநாட்டு மொழிதான்! இந்த விவரத்தை ஏற்கனவே ஆயிரமாயிரம் மேடைகளில் சொல்லிவிட்டோம்.

அடுத்ததான தமிழிருக்கலாம் என்ற வாதத்தைக் கவனிப்போம். தமிழுக்கு இந்தியத் துணைக்கண்டத்தின் ஆட்சி மொழி என்ற பெருமையை இவர்கள் என்றும் தரப்போவதேயில்லை. ஆனால், நியாயமான உரிமைகளைக்கூட அல்லவா மறுக்கின்றனர். பொதுவாக, பணவிடைத் தாள்கள், அஞ்சல் கூடுகள்—அட்டைகள் முதலியவற்றில்கூட இந்தியின் தனி ஆதிக்கம் ஒழிந்தபாடில்லை. நாமும் பிற பலரும் பல முறை வட்டார மொழிகளிலும் அவற்றை அச்சிட்டு வழங்கக் கோரினோம்! அதைக்கூட வம்படியாக மறுத்திருக்கிறது, தில்லிக் கொற்றத்தை ஆட்டி வைக்கும் வடவர் கூட்டம். தமிழகப் புகை வண்டி நிலையங்களில் உரிய இடத்தில் தமிழ்ப் பெயர்களை எழுத நாம் நடத்திய போராட்டம் அதற்குள் நெஞ்சை விட்டு நீங்கிவிடவில்லை. "வானொலி" என்ற தேனொலி மட்டும் ஒலிக்கட்டும் என்ற தென்னகத்தார் கோரிக்கையையும் எள்ளி நகையாடியது தில்லிக் கொற்றம். அறிவோம்!

என்றாலும் லோகியா நம்மையெல்லாம் மூடர்களாகக் கருதி, சாகச மொழி பேசுகிறார்! ஏமாறுவதற்கு, நாம் உலக வரலாற்றை உணராதவர்களில்லை! நம்மை இனியும் ஏமாற்றிவிட இவர்கள் வல்லவர்களுமில்லை!

சென்னை மாவட்ட சோசலிசக் கட்சிச் செயலாளர் ஐயனாவரம் நிகழ்ச்சி பற்றி விடுத்த அறிக்கையில், எப்படியும் ஆங்கிலப் பொது உபயோகத்தை அழித்தே தீரப்போவதாகச் சொல்லியுள்ளார். இது வானத்து மீன்களைப் பிடித்து இடித்து விளையாடியே தீருவேன் என்று சிறு குழந்தைகள் சொல்வதையே ஒத்திருக்கிறது.

லோகியா விடுத்த ஐதராபாத் அறிக்கையைப் பின்னர் பார்ப்போம்.

மொத்தத்தில்...இனி எவனாகிலும் தமிழகத்திற்கு வந்து இந்தியில் பேசுவதோடு நில்லாமல் தமிழகத்தாரைப் பார்த்துச் சோடாப் புட்டிகளை வீசினால் நிலைமை இப்படியே இருக்காது. கழகத்தின் கட்டளை மட்டும் பிறக்குமேயானால், இனி சோடாப் புட்டிகளை எறிவோரின் மானம் பறக்கும்; மரியாதை பறக்கும்; கௌரவம் பறக்கும்; மற்றும் தலையாய எல்லாம் பறக்கும்!

எச்சரிக்கை! எச்சரிக்கை! இதுவே இறுதி எச்சரிக்கை! ★

காதலன்! வீரன்! தியாகி!

கடமைக்கென வாழ்ந்தான்!

மங்காது அவன் நாமம்; அங்கேரி மறக்காது அவன் தொண்டு!

(முன் இதழ்த் தொடர்ச்சி)

வீரவிழிகளின் பார்வைபட்டு எனது சிவந்த கன்னங்கள் மேலும் கொஞ்சம் சிவப்பேறிக்கொண்டன! என்ன பேசுவதென்று தெரியாமல் எதிரே மேசையிலிருந்த லில்லிப்பூக்களையே பார்த்துக்கொண்டிருந்தேன். லில்லிப் பூக்களுக்கு எங்கே எனது இதயத் தவிப்பு தெரியப்போகிறது? அவை அவரிடம் பேசவில்லை; தூது போகவில்லை. எனது பருவச்சிரிப்பு என்னைக் காட்டிக்கொடுத்தது!

அவர் என்னை அருகே அழைத்தார். காலடியெடுத்து வைக்கும் போதெல்லாம் இன்பவீணை ஒலி தருவதை உணர்ந்தேன். அருகே சென்றபோது, எதிரே படத்திலே தெரிந்த அவரது பெற்றோரைக் காட்டி, "இவர்கள் நம்மை இப்போது வாழ்த்துகிறார்கள்" என்று ஆர்வத்தோடு கூறினார். என்னையுமறியாமலே எனது கைகள் அந்தப் படத்தை நோக்கிக் குவிந்தன. மலெட்டர் மகிழ்ந்தார். அந்த இன்ப இதயத்துடனேயே, "மரியா! வாழ்க்கைப் பாதையிலும் நாம் இருவரும் இணைந்துவிட்டால்..." என்று வார்த்தையை முடிக்காமலே பெருமூச்சு விட்டார்.

அவருக்கிருந்த வாலிப கால ஏக்கம் எனக்கும் இல்லாமலா இருந்தது? என் இதயமும் அவர் காட்டிய வாழ்க்கைப் பூங்காவிலே குதித்திடத் துடி துடிக்கத்தான் செய்தது. ஆனாலும்,மதமெனும் மதில் எங்களின் முன்னே நீண்டு வளர்ந்திருந்தது. நானோ கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவள். அவரோ மறுப்பு வகுப்பைச் சேர்ந்தவர். இந்த நிலையிலே யாராவதொருவர் தங்களின் மதப் பிரிவைவிட்டு வந்தால்தான் மண விழாவிலே ஒன்றுபட முடியும். எனவே, இந்தக் காரணங்களையெல்லாம் எடுத்துகாட்டி "காதல் மலர்ந்தது; கண் திறந்தது. ஆனாலும் சமூகத்தின் கண்கள் மூடிக்கிடக்கின்றனவே. என் நேசரே! என் பொருட்டுப் புண்ணாக்கிக் கொள்ள வேண்டாம், மனதை" என்று விளக்கினேன். "விழியற்றவர்களைக் கண்டு அஞ்சிப் பதுங்குவதா? வழி காண்போம் புது வாழ்வுக்கு!" என்று கூறி என்னையே தொடர்ந்தார். எங்களது இதயத்திலே அரும்பிய உண்மைக் காதல், பயணத்தைத் தொடர்ந்த எங்களது கால்களைப் பலவீனப் படுத்தவில்லை?

மூன்று மாதங்களுக்குப் பிறகு 1945-ஆகஸ்டிலே புதாபெஸ்டிலிருந்த சிறியதொரு கத்தோலிக்கக் கோயிலிலே ஆடம்பரமின்றி எங்களது திருமணம் நடந்து முடிந்தது. மலெட்டர் மதம் மாறியது குறித்து மறுப்பு மதத்தாரிடையே சலசலப்புக் கிளம்பியது என்றாலும், காலப் போக்கிலே அது மறைந்தே போய்விட்டது. மலெட்டரின் தந்தையோ பல்கலைக் கழகப் பேராசிரியராகவிருந்து வந்தார். அவர் மகனின் மண நிகழ்ச்சியிலே தலையிடவேயில்லை. எனவே, எங்களது புதிய வாழ்க்கையிலே பயங்கரமான புயலடிக்கவில்லை. அமைதியாகச் சென்றுகொண்டிருந்த வாழ்க்கையை மேலும் எழிலாக்க, சுவையாக்க, 1946-ஜூன் மாதத்திலே அழகிய ஆண் குழந்தையொன்றைப் பெற்றெடுத்தேன். பால் மலெட்டரையே அழகிலும், உருவத்திலும் நினைவு படுத்திய அந்தக் குழந்தைக்கு 'பால்' என்ற பெயரையே சூட்டினோம்.

இன்பம் தொடர்ந்தது! அன்பு மலர்ந்தது! 1948-ல் பெண் மகவொன்றைப் பெற்றெடுத்தேன். மரியா என்ற எனது பெயரையே அவளுக்குச் சூட்டினோம். மரியாவின் பின் சூடித் பிறந்தாள்.

குழந்தையும் கையுமாக நானிருந்த போது, மலெட்டரை ஊருக்கு ஊர் மாற்றினார்கள். என் தாய் என்னோடு உதவிக்கு வந்து சேர்ந்தாள்.

ஒரு நாள், மாலைப் பொழுது உருசிய ராணுவ உடையோடு, என் எதிரே வந்து நின்றார் மலெட்டர். விபரம் புரியாமல் திகைத்து நின்றேன். "உருசிய வீரர்களை எதிர்த்து, அவர்கள் புரிந்துவந்த கொடுமைகளை ஒழிக்கக் கைதூக்கிய மலெட்டர், இப்படி உருசிய உடையோடு வந்திருக்கிறாரே! அன்றொருநாள் அங்கேரியை நோக்கிவந்த பிரயாணிகள் இரயிலை இடையிலே மறித்து உருசிய வீரர்கள் கொள்ளையிட்ட போது, அதே இரயிலிலே வந்த மலெட்டர் தாவிக் குதித்துப் போராடி அந்த உருசியர்களை விரட்டியடித்தாரே...?" இந்த நிகழ்ச்சியெல்லாம் நினைவிலே படமாக ஓடப் பைத்தியமாகி நின்றேன். மலெட்டரோ சிரித்துக்கொண்டே, "கம்யூனிசத்தை எதிர்த்த இந்த மலெட்டர் இப்போது ஒரு கம்யூனிஸ்ட் குழுவிலே அங்கம் வகிக்கிறானே என்று பார்க்கிறாயா? எல்லாம் காரியமாகத்தான். முழுக்க முழுக்கக் கம்யூனிசத்தை ஆதரித்துவிட நானொரு முட்டாளல்ல. இப்போதைக்கு மக்களுக்கு சேவை புரிய இது அவசியமாகப்பட்டது எனக்கு. உன் கருத்து எப்படியோ?" என்று கேள்வி போட்டார். நான் எதுவுமே கூறவில்லை. எனது மௌனம் அவரை அதிகமாகச் சிந்திக்க வைத்தது. என்றாலும் அவர் புதிதாகக் கொண்ட கொள்கையை மாற்றுபவராக இல்லை.

ஏன் இந்த மலெட்டர் இப்படிப் போய்விட்டாரென்றே அடிக்கடி எண்ணத் துவங்கினேன். நான் எதிர்பார்த்துக்கொண்டிருந்த ஆபத்துக்களும் உருவாகிக்கொண்டிருந்தன. மலெட்டர் உருசியக் குழுவிலே உயர்பதவிகள் வகிக்கத் துவங்கினார். அவரது பதவி உயர உயர எங்களை நோக்கித் தொல்லைகளும் வளர்ந்தன. ஒற்றர்கள் நாளெல்லாம் எங்களது வீட்டைச் சுற்றியே அலைந்தனர். "உருசிய அரசாங்கத்துக்கு எதிராக, அங்கேரிய மக்கள் சக்திக்கு ஒத்தாசையாகப் 'புரட்சி' செய்யப் போகிறோம். அங்கேரிய வாசியாகிய தாங்கள் இப்போது உருசியக் குழுவிலேயிருந்தாலும் நாட்டு விடுதலையை மறக்காமல் ஒத்துழைக்க வேண்டும்!" என்று உருசிய ஒற்றர்களே கடிதங்கள் தயாரித்து அனுப்பத் துவங்கினர். மலெட்டரை மடக்க எவ்வளவோ சதி செய்து பார்த்தனர். புடம் போடப்பட்டார் மலெட்டர். உருசிய ஒற்றர்களால். மலெட்டருக்கு மிகவும் வேண்டிய நண்பர்களை கைது செய்து விசாரணைக் கூடத்துக்கு அனுப்புவதுபோலவும், அந்த நண்பர்களின் மனைவிமார்களை மலெட்டரிடம் அனுப்பி வைத்து 'எப்படியும்' தங்கள் கணவன்மார்களை தப்பவைத்துவிட வேண்டுமென்று கொஞ்சுவது போலவும் நாடகமாட வைத்தனர் ஒற்றர்கள். ஆனால், மலெட்டர் இதிலெல்லாம் முழு எச்சரிக்கையாகத் தப்பிவந்தார் புடம்போட்ட ஒற்றர்கள் மலெட்டரை தூய்மையானவரென்பதை நிரூபித்தனர். பதவி மேலும் உயர்ந்தது. அதற்குப் பிறகு.

கம்யூனிசக் கொள்கையை என்னிடம் பரப்ப எவ்வளவோ பாடுபட்டார் மலெட்டர். அதிலெல்லாம் அவர் தோல்வி காணவே, உருசிய குழுவின் மேலிடம் அவர்மீது அதிக கவனம் செலுத்தத் துவங்கியது

"உனது கொள்கைக்கு உன் மனைவி ஒத்து வராவிட்டால் அவளை மணவிலக்குச் செய்துவிடுவது தானே?" என்று உருசியக் குழு மலெட்டரைத் தூண்டியது. மலெட்டர் துடிதுடித்துப் போனார்.

"ஆசை மிக்க மனைவியையும், அன்புக் குழந்தைகளையும் பிரிவதா?" என்று தத்தளித்தார் மலெட்டர். இதை நான் உணர்ந்த போது அவரது நிலை குறித்துச் சிரிக்கத்தான் முடிந்தது, என்றால். இப்போது வீட்டுப் பிரச்னை மீதே கை வைத்தது உருசியக் குழு! இப்படி ஒரு தாக்கீது வருமென்று எதிர்பார்க்கவில்லை மலெட்டர். எனவே குழம்பினார். அவரது பணம் என்னிடம் வருவதற்குக்கூட உருசியர்கள் தடை போடுவார்களென்று நம்பிய நான்! எனது உழைப்பின் மீது நம்பிக்கை வைக்கத் துவங்கினேன்.

"போட்டோ ஸ்டுடியோ" ஒன்றிலே "போட்டோ கிராப"ராகப் பணியாற்றத் தொடங்கினேன். காலையிலே ஸ்டுடியோவுக்கு வரும் நான் நள்ளிரவிலேதான் வீடு திரும்ப முடிந்தது. அதுவரை வீட்டிலேயிருக்கும் எனது செல்வங்களை கவனித்துக் கொள்ள யாருமே இல்லை. எனக்குத் துணையிருந்த எனது தாயை உருசியர்கள் 'பயங்கரவாதி'யாகக் கருதியதால், எனது சகோதரியிடம் போய்ச் சேர்ந்தாள் அவள். மலெட்டரோ ஆறு மாதங்களுக்கு மேலாகத் தொடர்ந்து நாங்களிருக்கும் பக்கம் வரவே இல்லை. எனவே குழந்தைகள் பகல் பொழுதிலே யாருடைய ஆதரவுமில்லாமலே வாழ்ந்துகொண்டிருந்தன. நள்ளிரவிலே நான் வீடு திரும்பும் போது சின்னஞ்சிறுசூடித் மட்டும் எனது அன்புக் கைகளுக்காகக் காத்திருப்பாள். பெரியவன் பாலும், மரியாவும் தூங்கிக்கொண்டிருப்பார்கள். மாலையிலே அவர்கள் செய்த குறும்பையெல்லாம் ஒன்றுவிடாமல் சொல்லி முடித்த பின்னர்தான் சூடித் கண்மூடுவாள். சின்னவர்களின் குறும்பைக் கண்டு, மகிழமுடியாத இருள் கப்பிய எனது வாழ்வை எண்ணி மனங் கலங்குவேன். இந்த வேதனையான நேரத்திலே...

ஒரு நாள் மலெட்டர் ஸ்டுடியோவுக்கு 'போன்'' செய்தார்.

'நமது மணவிலக்குப்பற்றிப் பேச வேண்டும். நாம் உல்லாசத்துக்காக முன்னர் வழக்கமாக சந்திக்கும் மலைப் பகுதிக்கு வந்து சேர்!'' என்று கட்டளையிட்டார் மலெட்டர். குறிப்பிட்ட நேரத்திலே அந்த உல்லாச மலைப் பகுதிக்குச் சென்றேன். லில்லிப் பூக்கள் பூத்துக் கூத்தாடின! பழைய நினைவு திரும்பியது. எப்படித் துவங்கிய வாழ்க்கை இப்படியா முடிய வேண்டும்? சிரிக்கச் சிரிக்கப் பேசிய மலெட்டர் சிடுப்புத் திரைக்குள்ளே மறைந்துகொண்டாரே! இப்போது எதிர்காலம் என்னை நோக்கிப் பயங்கரமாகச் சிரித்தது! வெகு நேரமாகக் காத்திருந்தும் மலெட்டரை அங்கே நான் காண முடியவில்லை. சோர்ந்து போய் வீடு திரும்பினேன். வீடு வந்த சிறிது நேரத்துக்கெல்லாம் என்னைத் தேடிக்கொண்டு மலெட்டர் வந்திருந்தார். வந்தவர் பூரிப்பான செய்தியைத் தந்தார். மண விலக்குப்பற்றி அனுப்பிய கடிதத்தையும், நோட்டிசையும் நாசப்படுத்திவிடும்படி கூறினார். மகிழ்ந்தார்; அவரையும் விட நான் மகிழ்ந்தேன்! அன்றிரவு தங்கிவிட்டுக் காலையிலே புறப்பட்டுச் சென்றார்.

சில நாட்களுக்குப் பிறகு ஸ்டுடியோவுக்கு அவரிடமிருந்து 'போன்' வந்தது. அதிலே, அடுத்த நாள் வரும் கிருத்துமசுக்கு வருவதாகக் கூறியிருந்தார். இந்தச் செய்தியை 'போன்' மூலமாகக் குழந்தைகளுக்கும் அறிவித்தேன். அந்த இன்பச் செய்தியை எவ்வளவோ குதூகலத்தோடு குழந்தைகள் வரவேற்றன. கிருத்துமசு வந்தது. ஆனால் நாங்கள் எல்லோரும் எதிர்பார்த்த மலெட்டர் தான் வரவில்லை. இதையும் தாங்கிக்கொண்டு நான் ஸ்டுடியோவுக்குப் புறப்பட்டுப் போய்விட்டேன். குழந்தைகள் ஏக்கத்தால், பாதையைப் பார்த்துக்கொண்டே கதவருகே அமர்ந்திருந்து மலெட்டரை-அன்பு அப்பாவை எதிர்பார்த்தது, ஒரு சோகச் சித்திரம். அதை மறுநாள் அடுத்த வீட்டுக்காரர்களின் மூலமாக அறிந்து, வேதனை மிகக் கொண்டேன். இதற்கெல்லாம் பிராயச்சித்தமாக அடுத்த ஆண்டு, அதாவது 1953-ம் வருடத்திய கிருத்துமசு விழாவிலே முன்னதாகவே கலந்துகொண்டு மகிழ்வித்தார் மலெட்டர். இந்த நாள் நானும், குழந்தைகளும் என்றென்றுமே மறக்கமுடியாமலாகியது. மலெட்டர் எங்களோடு கொண்டாடிய கடைசி கிருத்துமசு இதுதானென்றால் இதன் சிறப்பு எத்தயைதாகயிருக்கும்?

ஆமாம்! நாங்கள் எதிர்பார்த்த புயல் உருவாகியே தீர்ந்தது. 1954-ம் ஆண்டு சிவில் கோர்ட்டிலே எங்களது மணவிலக்கு வழக்கு விசாரணைக்கு வந்தது. எனது இரண்டு பெண்பிள்ளைகளையும் வாழ வைக்கும் செலவுத் தொகையாக மலெட்டரின் சம்பளத்திலே 40 சதவிகிதம் எனக்குத் தரவேண்டுமென்று கோர்ட்டார் தீர்ப்பளித்தார்கள். மூத்த மகன் பால் அவரிடம் ஒப்படைக்கப் பட்டான். அங்கேரிய வழக்குமன்றச் சட்டப்படி!

— 9-ம் பக்கம் —

கதாசிரியர் சுப்புணியும் காவியமேதை காமராசரும்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் எழுச்சியும் வளர்ச்சியும் எதிரிகளின எண்ணச் சுழற்சியிலே பெரியதோர் அதிர்ச்சியை உண்டாக்கியுள்ளன. அதனல்தான் பொதுவாக அரசியல் அரங்கில் இருக்கக்கூடாத நிகழ்ச்சிகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டுள்ளன. அரசியல் கட்சிகளுக்கிடையே இருக்கவேண்டிய போட்டி மனப்பான்மையும் கொள்கைப் போராட்டமும் இருப்பதைக் காட்டிலும் இங்கேயிருக்கிற சென்னை சர்க்காருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இருப்பதைக் காண்கிறேம். முன்னேற்றக் கழகமும் காங்கிரசுக் கட்சியும் தங்களது பலத்தினைக் கணக்கிட, மக்களிடத்திலே தாம் பெற்றுள்ள ஆதரவினை எடை போட்டுக்கொள்ள, நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் நாட்டையும் மக்களையும் பாதிக்கும் எல்லாப் பிரச்னைகளிலும் எந்தெந்த வகையில் தாம்முன்னிற்கிறேம் என்பனபோன்ற செய்திகளைக் கூறலாம். முன்னேற்றக் கழகத்தின் அரும்பணி அதன் தொண்டினைக் காட்டுவதாகவே இருக்கிறது. ஆனல் காங்கிரசுக் கட்சி தனக்கென உள்ள தனித் தன்மைகளை அந்தத் தன்மைகள் தமிழக மக்களுக்குச் செய்துள்ள நன்மைகளை இதயம் திறந்து சொல்ல முடியவில்லை. மக்களின் க்வனத்திலேயிருந்து வெகு விரைவிலேயே மறைந்துவிடப் போகிற எந்த ஒரு அரசியல் கட்சியும் தன்னைத்தானே தயார் செய்துகொள்வதற்குப் பதிலாகத் தன்னுடைய ஆதிக்கத்திற்கும் அதிகார வெறிக்கும் அடிமைப் பட்டுள்ள சர்க்காரிடத்திலேதான் சரணடைய வேண்டும் என்பதை தமிழ்நாட்டுக் காங்கிரசும் அனைத்திந்திய சர்க்காரை – அதன் செயல்களைச் சொல்லி. வாழத் துடிக்கிறது. சர்க்காரின் சாதனங்களும் சாதனைகளும் தாயக மக்களுக்காகப் பொறுப்பேற்றுள்ள ஒரு சர்க்காரின் கடமைகள் என்பதனை மறந்துவிட்டு அவைகளையெல்லாம் காங்கிரசுக கட்சியின் கருவிகள் என்பதாக எண்ணிவிட்டார்கள். தமிழ்நாட்டின் நல்வாழ்வுக்கும், தாய்மொழியின் தகுதிக்கும், தாயகத்தின் புகழ்வளர்க்குமதகுதிபெற்ரேரை வாழ்த்துவதற்கும் தன்னை அர்ப்பணித்துக்கொள்ளாத காங்கிரக்கட்சி தனக்குள்ள பதவி ஆசையை – அதிகார மமதையை எளிதில் இழந்துவிடத் தயாராக இல்லை என்பதைத்தான் அதனுடைய அரசியல் சுற்றுலாக்கள் நமக்கும் நாட்டுக்கும் நானிலத்திற்கும் நன்கு அறிமுகப்படுத்திக் கொண்டுள்ளன. முன்னேற்றக் கழகத்தை எதிர்ப்பதற்காக முன்னணிப்படை அமைத்துவிட்டோம் என்ற முக்கிய அறிவிப்புடன் சென்னை சர்ககாரிலே இடம் பெற்றுவிட்ட அமைச்சர்கள் அத்தனை பேர்களும் மாவட்டம்தோறும் தங்களது வீரதீரத்தைக் காட்டிககொண்டுள்ளனர். கழகத்தின் வளர்ச்சியும் தெளிவான அரசியல் உணர்ச்சியும் அவர்களுக்கு காய்ச்சலையும் உடல் எரிச்சலையும் ஏராளமாகத் தந்துள்ளன. சுற்றுப்பயணத்திலே அமைச்சர்கள் அளித்துள்ள கருத்துக்களையெல்லாம் கணக்கிட்டுப் பார்ப்பது அவர் தம் மடமையை அறியப் பயன்படும்.

திராவிட முன்னேற்றக் கழகம் பத்தாண்டுக் காலத்திற்கு மேலாகத் தன்னுடைய கொள்கைகளை இலட்சியங்களை இவைகளைக் காத்து வளர்த்திடும் செயல் முறைகளை, இறந்த கால எதிர்காலச் சான்றுகளை எத்தனையோ வகைகளில் எழுத்தாலும் பேச்சாலும் விளக்கிவிட்டது. ஆனல் நிதி அமைச்சர் எனப்படும் சி. சுப்பிரமணியம் என்பவர் கழகத்தின் கொள்கை விளக்கத்தினை இன்றளவும் புரிந்துகொள்ளவில்லை. புரிந்து கொள்ள முயலவில்லை. புரிந்துகொள்வதற்குத் தக்க தகுதி தனக்கு இருப்பதாகவும் உறுதிப் படுத்திக்கொளளவில்லை! 1952-ம் ஆண்டில் அமைச்சரான பிறகுதான் இவர் சில வார்த்தைகளைப் பேசப் பழகிக்கொண்டார். இப்போது பேசுவதையெல்லாம் முன்னேற்றக் கழகத்திற்காகவே பேசுவது என முடிவு செய்துவிட்டார். பேசுவதிலே தவறில்லை. ஆனல் பேசுவதைப் பேச வேண்டிய முறையோடு அமைச்சருக்குத் தேவையான அரசியல் அறநெறியுடன் பேச வேண்டும். அப்படி அவரலே பேசமுடிகிறதா? பேசுகிருரா என்பனதான் நம்மாலே ஒப்புக்கொள்ளமுடியாத செயலாக அமைந்துள்ளது. இவர் எத்தனையோ முறை சவால் விட்டுக் களைத்துப் போனவர். முன்னேற்றக்கழகத்திறகு எதுவுமே தெரியாதென்று சொல்லித் தன்னுடைய அறியாமையை மிக அதிகமாக அறிமுகப்படுத்திக் கொண்டவர். முன்னேறறக் கழகத்திற்கு எதுவுமே எழுதத் தெரியாதென்று பேசிவிட்டு, முன்னேற்றக் கழகத்தவர் எழுதிய புத்தகங்களையே படித்துக்கொண்டிருப்பவர். படித்துக் கொண்டிருப்பதாகத் தன்னைப்பற்றிச் சட்ட சபையிலே பறைசாற்றிக் கொண்டவரும் இவரேதான்! முன்னேற்றக் கழகத்தின் மீது இழிவான அவதூறுகளையெல்லாம் கூறிஅலறித் துடித்து அவைகளைத் திரும்பப் பெற்றுக்கொண்டவரும் இந்தஅமைச்சர்தான்! சென்னை சர்க்காரிலே கொஞ்சம் பேசத் தெரிந்த பெரிய மனிதனென்றும் தனக்கும் முதுகெலும்புண்டு என்று மற்றவர் எண்ணிக்கொள்ள வேண்டுமென்பதற்காகவும், புளுத்துப்போன சாக்கடைக் கருத்துக்களை துணிந்து தெரிவிப்பார்! சர்க்காரிலே இருக்கின்ற எல்லா அதிகாரிகளும் தங்களுக்குள் அறிவாற்றலினல் தயாரித்துக் கொடுக்கும் வரவு செலவுத் திட்ட அறிக்கைகளையெலலாம் ஒழுங்காகப் படித்து முடித்து விடுவதினலேயே நிதியமைச்சர் ஆகியிருப்பவர் தன்னுடைய நிபுணத்துவப் பேச்சுக்களை தமிழ்நாட்டின் பலஇடங்களிலே பரவ விட்டிருக்கிருர்! சென்னை சர்க்காருக்கு இவரைவிட்டால் வேறு ஆதரவு இல்லையென்கிருர்கள். வெளியிலே இவர் பேசுகின்ற செய்திகளைக் கேட்டால் இவர்கூடவா சென்னை சர்க்காரைத் தாங்கிக் கொள்ள முடிகிறது என்று தான் சந்தேகப்பட வேண்டியுள்ளது. இவரிலும் கேடு கெட்டவர்கள் முதலமைச்சர்களாக இருக்கும்போது இவர் போன்ருர் சர்க்கார் கட்சித் தலைவர்களாக இருப்பது-இங்குமட்டுமே நடைபெறக்கூடிய செயலாகும்!

திராவிட முன்னேற்றக் கழகத்தை மறுத்துப் பேசுவதற்கும் அதனுடைய இலட்சியங்களைக் குறைத்துக் கணக்கிடுவதற்தும் நிதியமைச்சர் என்ற தகுதி மட்டும் இருந்தால் போதாது என்பதனை சுப்பிரமணியம் இன்னும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. முன்னேற்றக் கழகத்தின் இலட்சியம், குறிககோள், கொள்கைகள் இவைகளுக்கெல்லாம் தனித்தனி விளக்கங்கள் உண்டு. விவேகம் படைத்தவர்கள் மட்டுமே இதனைப் புரிந்து கொள்ளமுடியும். இவர்களுக்கெல்லாம் என்ன தெரியுமென்று ஏளனம் பேசுபவர்களுக்குத் தெரியமுடியாது. எதுவும் தெரியாதவர்கள் என்று பேசிக்கொண்டிருந்த மதிமந்திரி சுப்பிரமணியம் என்பவர் சென்ற திங்களில் ஒருநாள் மதுரைப் பொதுக் கூட்டத்திலே பேசினர்! ஒரு நாட்டின் அமைச்சர் பேசுகிருர் என்ருல் உலகத்து அமைச்சுகளிலே நடைபெறும் அத்தனை நிகழ்ச்சிகளையும் அழகாகத் தொகுத்துக் காட்டித் தன்னுடைய அமைச்சுதான் அகிலத்துக்கெல்லாம் சான்ருகத் திகழ்கிறது என்று விளக்கவேண்டும். ஆனல் இந்த அமைச்சர் அதற்கெல்லாம் தான் இலாயக்கில்லை என்று உறுதியாகத் தெரிவிப்பவர்போல முன்னேற்றக் கழகத்தவர்க்குக் கதை எழுதத்தானே தெரியும் இவர்களால் எப்படி ஆட்சிநடத்த முடியும். திராவிட நாட்டுக் கூச்சலைப் பத்தாண்டுகளுக்கு நிறுத்திவைக்கட்டும்–என்று வாய்திறந்தார். சாக்கடை ஓடியது என்று நண்பர்கள் சொன்னுர்கள்–இருப்பினும் நான் சொல்லத் தயாராக இல்லை! அறிந்தோரிடம் கேட்டுக் கொள்க! கதை எழுதுவது தனிக்கலை, தனித்திறமை என்பது அமைச்சர் அறியாத ஒன்ருக இருக்கலாம்! எதுவும் தெரியாதவர்கள், கதையாவது எழுதுவார்கள் என்பதை அமைச்சர் அறிந்து கொண்டவர் என்று வெளிக்காட்டிக்கொண்டார்! கதை எழுதுவது அமைச்சருக்குப் பழக்கப்பட்ட செயலா? அவருக்கு எழுதத்தெரியுமா? எத்தனை கதைகள் எழுதியிருக்கிருர்? - இவைகளையெல்லாம் விளக்கும் வீராப்புத்தன்மை அமைச்சர் சுபபிரமணியம் அவர்களிடத்திலேஉண்டா என்று நான் கேட்கவில்லை. விரும்பவுமில்லை! அவருக்குள்ள தகுதியை எவரும் சொல்லாமலேயே எல்லோரும் தெரிந்து வைத்துள்ளார்கள்! தனக்கு இணை தானே என்று தவருக மதிபபிடப்பட்டுள்ள மதியமைச்சர் தன்னுலே ஆகாத கதையெழுதும் கலை உணர்ச்சியைக் கேலி செய்வது அவருடைய தகுதிக்கும், இருப்பதாகச் சொல்லப்படும் திறமைக்கும் கேவலம் என்பதை உணராமல்போனது பதவிவெறியின் காரணத்தால்தான்! இதுபோன்ற பேச்சுக்கள் கழகத்தின் குறிக்கோளை மறைத்துவிட முடியுமா?

திராவிட முன்னேற்றக் கழகத்தின் எழுத்துலகச் சாதனையை அற்புதப் படைப்புகளை அமைச்சருடைய போதை கலந்த மதிப்புரைக்காக இங்கே எடுற்துக் காட்டுவதானல் நீண்ட பட்டியலாகும். ‘வேலைக்காரி’ யும் “ஓர் இரவும்” தேசீயக் காங்கிரசின் நேரடி வாரிசுகளாக இருந்த கல்கி கிருட்டினமூர்த்தியும்–வ. ராமசாமியும் பாராட்டுமளவுக்குப் பெருமைபெற்றவை! இதனை அப்பாவி சுப்பிரமணியம் என்ற அவசரக்கார அமைச்சர் அறிந்திருக்கமாட்டார்! நேருவின் தலைமையிலே நடைபெற்ற அகில இந்திய எழுத்தாளர் மாநாட்டில் வேற்று மொழிகளிலே தரப்படத்தக்க நல்ல கதைகள் என்று தேர்ந்தெடுக்கப்பட்டவைகளிலே டி. கே. சீனிவாசன் எழுதிய ‘துன்பக் கதை’யும் ஒன்று! இதனைத் தெரியாதவராக இருக்கும் சுப்பிரமணியம் என்ற புடலங்காய் வியாபாரி, எப்போதாவது டாக்டர் அ. சிதம்பரநாதன் அவர்களைச் சந்திக்கின்ற நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளட்டும்! சுப்பிரமணியத்திற்குக் கதை எழுதத் தெரிந்தால் இவரையல்லவா தேடியிருப்பார்கள் பரிசு கொடுக்க. “இரக்கமெனும் ஒரு

— 8-ம் பக்கம் —

சுப்பிரமணியத்தின் மலிவுப் பதிப்புக்கள் விற்பனையாகின்றன!

நாரா நாச்சியப்பன்

இதுவரை நடந்த கதை.

தங்கம் தங்கமானவள். நெய்யூர் ஆசிரியர் கந்தசாமி வாத்தியாருக்கும் மரகத அம்மாளுக்கும் பிறந்தவள். சீர், வரதட்சிணை கொடுக்கப் போதுமான பணமில்லாக் குறையால் பருவமடைந்து பத்து ஆண்டுகளாகியும் திருமணமாகாமல் இருக்கிருள். கந்தசாமி வாத்தியாரின் நண்பர் முருகேசர் தங்கத்தைத் தன் வளர்ப்புப்பிள்ளை நடராசனுக்குக் கட்டிக்கொடுக்கும்படி கேட்கிருர். நடராசன் ஒற்றைக் கை முடவன். அத்தோடு அரைப்பைத்தியம். அவனைக் கட்டிக்கொள்ளும்படி தங்கத்தைக் கேட்கவந்த கந்தசாமி வாத்தியார் வாய்விட்டுச் சொல்லமுடியாமல் திண்டாடிப் போய்விட்டார். தற்செயலாக மல்லிகைப் பந்தலுக்கு அரும்பு திருடவந்த நடராசனை விரட்டவந்த தங்கம் அவன் தப்பி ஓட முயலும்போது விழுந்துவிட்டதைக் காண்கிருள். அவள் தாயும் அவளும் அவனை வீட்டுக்குள் தூக்கிக்கொண்டுபோய் அவனுக்கு மயக்கம் தெளிவித்து மருந்து போடுகிருர்கள். அவன்தான் தன்னை மணக்க இருப்பவன் என்பதையறிந்த தங்கம் அழுகிருள். இதற்கிடையில் அண்ணுமலைப் பண்டிதர் என்ற ஒரு பெரிய மனிதர் அவர்கள் வீட்டில்வந்து தங்குகிருர். ஒருநாள் ஒற்றைக்கை நடராசன் தன்னைத் திருமணம் செய்துகொள்ளும்படி தங்கத்தைக் கேட்கிருன். அப்போது தங்கத்தின் மாமன்மகனுன நவநாகரிக இளைஞன்சுந்தரேசன் அங்கே வருகிருன். தங்கம் அவனிடம் ஈடுபாடு கொள்கிருள். அண்ணுமலைப் பண்டிதரைப் போலவே அவனும் அவர்கள் வீட்டில் நிலையாகத் தங்கிவிடுகிருன். அண்ணுமலைப் பண்டிதர் அரைப்பத்தியம் நடராசனுக்குக் கல்வி பயிற்றுவிக்க ஆரம்பிக்கிருர். ஆனுல், அவனைக் கல்வி பயிலத் தினமும் கதலிப்பட்டணத்திற்கு அழைத்துச்செல்கிருர். வியக்கத்தக்க முறையில் நடராசன் குணமாகி வருகிருன். இதற்கிடையில் அண்ணுமலைப் பண்டிதரின் திருவாசகம் காணுமற்போய் மீண்டும் கிடைத்துவிடுகிறது. அவர் திருவாசகத்தை எடுத்தது தங்கம்தான் என்று அவளைக் கண்டிக்கிருர்.

நடராசனுக்குக் கற்றுக் கொடுக்கும் கல்வியை ஏன் நெய்யூரிலேயே இருந்து கற்றுக்கொடுக்காமல், பண்டிதர் கதலிப்பட்டணம் அழைத்துச் செல்லவேண்டும் என்று சிந்தித்துச் சிந்தித்துப் பார்த்தும் கந்தசாமி வாத்தியாருக்கோ முருகேசருக்கோ உண்மை புலப்படவில்லை. இன்று பைத்தியத்தைத் தெளிவித்தார். நாளை கையைக் கூட வளரச் செய்துவிடுவார். அவரிடம் ஏதோ 'சித்து' இருக்கிறது என்பதில் சந்தேகமே இல்லை என்று முருகேச வாத்தியார் நினைத்தார். தான் நினைத்ததை எல்லோரிடமும் தெரிவித்தும் வந்தார். அவருக்குத் தன் பிள்ளை நடராசன் திருந்தி வருவதில் அத்தனை ஆனந்தம்!

ஒரு நாள் நடராசனும், அண்ணுமலைப் பண்டிதரும் கதலிப் பட்டணத்தில் இருந்த மருத்துவ மனை அருகில் உள்ள வீதியில் சென்றுகொண்டிருந்தார்கள். அண்ணுமலைப் பண்டிதருக்கு யாரோ தன்னைப் பின்தொடர்ந்து வருவது போல் தோன்றியது. அடிக்கடி பின்னுல் திரும்பிப் பார்த்துக்கொண்டே வந்தார். ஆனுல் அவர் கண்ணுக்கு யாரும் தட்டுப்படவில்லை. எல்லாம் மனப் பிராந்தி என்று நினைத்துக்கொண்டார். ஆனுல் ஏதோ ஒன்று அவர் மனத்திற்குள்ளேயே யாரோ தன்னை வேவு பார்க்கிருர்கள் என்று உணர்த்திக் கொண்டிருப்பது போலவே யிருந்தது. எப்படியோ மனத்தைச் சரிப்படுத்திக் கொண்டார். இரண்டு பேரும் மருத்துவ மனைக்கு வந்து முன் வாசலில் கிடந்த ஒரு நாற்காலியில் உட்கார்ந்தார்கள். சிறிது நேரத்திற்குப் பிறகு அவர்கள் ஒளி மருத்துவம் நடக்கும் பிரிவிற்குப் போனுர்கள். அப்போது நடராசன் "ஐயா! அதோ சுந்தரேசன்!" என்று சுட்டிக் காட்டினுன். சுட்டிக் காட்டிய பக்கம் பண்டிதர் சட்டென்று திரும்பிப் பார்த்தார். சுந்தரேசன் வெகு வேகமாக மருத்துவவிடுதியை விட்டுச் சென்றுகொண்டிருந்தான். அவன்தான் தன்னைத் தொடர்ந்து வந்திருப்பானே என்று அண்ணுமலைப் பண்டிதருக்குச் சந்தேகம் ஏற்பட்டது. ஆனுல் அவர் அதை வெளிக்காட்டிக்கொள்ளவில்லை. இருந்தாலும் அவர் அன்று முதல் சுந்தரேசன் மீது ஒரு கண் வைத்துக்கொள்ள ஆரம்பித்தார். பிறர் தன்னை உளவு பார்ப்பது என்பது அவருக்குப் பிடிக்கவில்லை.

இப்படி நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன. கந்தசாமி வாத்தியார் வீட்டுக்கு வந்த விருந்தாளிகள் அங்கேயே நிலையாகத் தங்கிவிட்டார்கள். கந்தசாமி வாத்தியாரும் யாரிடமும் கடுமுகம் காட்டாமல் எப்படியோ சமாளித்துக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் பிற்பகலில் கதலிப்பட்டணத்திலிருந்து திரும்பி வந்த அண்ணுமலைப் பண்டிதர் வண்டியிலிருந்து இறங்கினுர். நடராசன் அவர் இறங்கியவுடன் வண்டியைத் தட்டிவிட்டான். வீட்டு வாசற்படியில் காலடியெடுத்து வைத்த அண்ணுமலைப் பண்டிதர் "சார் போஸ்ட்" என்ற குரல் கேட்டுத் திரும்பினுர். தபால்காரன் இரண்டு கடிதங்களை அவரிடம்கொடுத்துவிட்டுப் போய்விட்டான். அவற்றை வாங்கிய அண்ணுமலைப் பண்டிதர் மேல் விலாசத்தைப் பார்த்தார். இரண்டும் சுந்தரேசனுக்குத்தான் வந்திருந்தன. அனுப்பு விலாசத்தை நோக்கினுர், ஒன்றில் கயி. குணவதி, சித்திரநல்லூர் என்றிருந்தது. இன்னென்றில் அனுப்பு விலாசம் குறிக்கப்படவில்லை. ஆனுல், தபால் முத்திரையிலிருந்து சென்னை என்று கண்டுகொள்ள முடிந்தது. இரண்டையும் தன் கையில் இருந்த புத்தகத்திற்கிடையில் வைத்து மறைத்துக்கொண்டு அண்ணுமலைப் பண்டிதர் வீட்டினுள்ளே நுழைந்தார். அப்படி நுழையுமுன் யாரும் தன்னைப் பார்க்கிருர்களா என்று சுற்றுமுற்றும் திரும்பிப் பார்த்துக் கொண்டார்.

சாப்பிட்டு முடிந்ததும் மேலே தன்னறைக்குச் சென்றவர் அறைக்கதவைத் தாழிட்டுவிட்டு உள்ளேயிருந்துகொண்டு கடிதங்களை ஒவ்வொன்ருக எடுத்து மிகவும் கவனமாகப் பிரித்துப் படித்தார். குணவதியம்மாளிடமிருந்து வந்த முதல் கடிதத்தைப் படித்தபோது அவர் முகத்தில் ஆச்சரியமும், திகைப்பும். கடுகடுப்பும், நகைப்பும் ஆகிய உணர்ச்சிகள் மாறி மாறிப் படர்ந்தன. ஆனுல் உறையில் விலாசமில்லாத இரண்டாவது கடிதத்தைப் படித்தபோது அவருக்கு ஒரே கோபம் கோபமாக வந்தது. வெறுப்புணர்ச்சி அப்படியே அவர் முகத்தில் தாண்டவமாடியது.

நெடுநேரம் அந்த இரண்டாவது கடிதத்தையே கூர்ந்து நோக்கியபடி சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். பிறகு ஏதோ முடிவுக்கு வந்தவர்போல் எழுந்திருந்தார். குணவதியம்மாளிடமிருந்து சுந்தரேசனுக்கு வந்த கடிதத்தைப் பத்திரமாகத் தம் பெட்டிக்குள்ளே வைத்துப் பூட்டினுர். பிறகு மிகவும் கவனமாகத் தான் பிரித்த அந்தக் கடித உறைகளில் அனுப்பு விலாசமில்லாத உறையை எடுத்து அதனுள் கடிதத்தை வைத்து மூடித் தாம் முன்னேற்பாடாகக் கொண்டு வந்திருந்த சோற்றுப் பருக்கையைத் தடவிஉறையை ஒட்டிவிட்டார். இரண்டு மூன்றுமுறை தான் அதைப் பிரித்த அடையாளம் தெரிகிறதா என்று திருப்பித் திருப்பிப் பார்த்துக்கொண்டார். அவர் தன் வேலையெல்லாம் முடிந்து திருப்திப்பட்டுக் கொண்டிருப்பதற்கும் அறைக்கதவு தட்டப்படுவதற்கும் சரியாக இருந்தது. அவசர அவசரமாக அருகில் இருந்த சோற்றுப் பருக்கையை எடுத்து எச்சிற் பணிக்கத்திற்குள்ளே தள்ளிவிட்டார். பின் தன் கையில் இருந்த கடிதத்தை மெத்தைக்குக் கீழே வைத்துவிட்டுக் கதவைத் திறந்தார்.

அங்கே வெற்றிலைப் பெட்டியுடன் தங்கம் நின்று கொண்டிருந்தாள்.

தங்கம் கதவுத் துவாரம் வழியாகத் தன்னைக் கவனித்திருப்பாளோ என்ற சந்தேகம் ஏற்பட்டது பண்டிதருக்கு. உடனே அவர் மூக்குத் துடித்தது. "எவ்வளவு நேரமாக இங்கே நின்றுகொண்டிருக்கிருய்?" என்று ஓர் அதட்டு அதட்டினுர்.

தங்கம் பொறுமையுடன், 'இப்போதுதான் வந்தேன். வந்தவுடன் கதவைத் தட்டினேன். நீங்கள் தூங்கிக்கொண்டு இருந்திருந்தால் தெரியாமல் அதைக் கலைக்க நேர்ந்ததற்காக மன்னிக்க வேண்டுகிறேன்." என்ருள் தங்கம்.

அவள் தன்னைக் கவனிக்கவில்லை என்று அவருக்குத் தோன்றியது.

"சரி, வெற்றிலைப் பெட்டியை வைத்துவிட்டுப் போ" என்ருர்.

தங்கம் அவர் கட்டிலில் பெட்டியை வைத்துவிட்டுச் சென்ருள். அவள் ஐந்தாறு படிகூடக் கீழே இறங்கியிருக்க மாட்டாள், அதற்குள் மேலேயிருந்து பண்டிதர் கூப்பிட்டார். "தங்கம், இந்தத் தபால் உன் அத்தானுக்கு வந்தது. தபால்காரனிடம் நான் வாங்கினேன். உன் அத்தான் வந்தவுடன் இதைக் கொடுத்துவிடு" என்று உறையை அவளிடம் கொடுத்தார். அவள் பண்போடு அதை வாங்கிக் கொண்டு சென்றுவிட்டாள்.

பகலெல்லாம் எங்கெங்கோ வெளியில் சுற்றிவிட்டு சுந்தரேன் மாலை நேரத்தில் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். காப்பி குடித்த பிறகு தங்கமும் சுந்தரேசனும் தோட்டத்திற்குள்ளே சென்ருர்கள்.

"அத்தான் உங்களுக்கொரு கடிதம் வந்திருக்கிறதே!" என்ருள் தங்கம்.

"யாரிடமிருந்து தங்கம்?"

அதுதான் தெரியவில்லை. ஆனுல் சென்னைத் தபால் முத்திரை இருக்கிறது!" என்ருள்.

சென்னை என்றவுடனே சுந்தரேசனின் முகம் கருத்தது. ஆனுல் சட்டென்று

அதைச் சமாளித்துக்கொண்டான். தன் இரவிக்கை இடுக்கில் இருந்த கடிதத்தை எடுப்பதில் முனைந்திருந்த தங்கம் அவன் முகமாறுபாட்டைக் கவனிக்கவில்லை.

கடிதத்தை எடுத்து அவன் கையில் கொடுத்தாள் தங்கம் அதற்குள், மரகத அம்மாள் "தங்கம், தங்கம்" என்று அவளைக் கூப்பிடும் சத்தம் கேட்டது. தங்கம் போய்விட்டாள்.

சுந்தரேசன் பரபரப்போடு அந்தக் கடிதத்தை எடுத்துப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தான். அதைப் படிக்கப் படிக்க அவனுக்கு ஆத்திரமும் கோபமும் அச்சமும் பீதியும் ஏற்படலாயின. இதற்குள் திரும்பி வந்த தங்கம். 'அத்தான், அடுத்த வீட்டு ராதாவோடு கோயிலுக்குப் போய் வருகிறேன்' என்று சொல்லிவிட்டுச் சென்றுவிட்டாள். நல்ல வேளை! அவள் தன்னைக் கவனிக்கவில்லை. இல்லாவிட்டால், தன்னிலையைத் தன் முகமே காட்டிக் கொடுத்திருக்கும் என்று எண்ணிக் கொண்டான்.

சுந்தரேசன் அந்தக் கடிதத்தைச் சுக்குச் சுக்காகக் கிழித்துப் போட்டுக்கொண்டிருந்தான். அப்போது அங்கே வந்து சேர்ந்தார் அண்ணாமலைப் பண்டிதர். அவரைக் கண்டதும் அவன் தன் உணர்ச்சிகளை மறைத்துக்கொள்ள முயன்றான், ஆனால் முடியவில்லை.

"என்ன தம்பீ! ஒரே வாட்டமாயிருக்கிறாயே? இது என்ன? ஏதோ கடிதத்தைக் கிழித்துப் போட்டுவிட்டாய்போலிருக்கிறதே!" என்று அவர் கேட்டார்.

8. இலண்டனுக்கும் போய் வருவேன்

பொதுவாக சுந்தரேசனும் அண்ணாமலைப் பண்டிதரும் ஒருவரிடம் ஒருவர் நடந்துகொண்டதைப் பார்த்தால் ஒருவரைப் பற்றிய ரகசியத்தை மற்றவர் அறிந்துகொண்டதைப் போலவும், அதை ஒருவருக்கொருவர் வெளிக்காட்டிக்கொள்ளாததைப் போலவும் இருந்தது. சுந்தரேசன் பண்டிதருடைய உண்மையைத் தான் அறிந்திருப்பதாக எண்ணிக்கொண்டான். ஆனால் தன்னைப் பற்றி அவர் இதுவரை தெரிந்து கொள்ளவில்லை யென்றும், இனிமேல் தெரிந்துகொண்டுவிடாதபடி சிறிது காலம்வரை பார்த்துக்கொள்ளவேண்டுமென்றும் தீர்மானித்துக் கொண்டான். அண்ணாமலைப் பண்டிதரோ முதலில் சுந்தரேசனைப் பற்றிச் சந்தேகம் மட்டுமே கொண்டிருந்தார். இப்போது அந்த இரண்டு கடிதங்களையும் படித்துப் பார்த்த பிறகு அந்தச் சந்தேகமெல்லாம் உண்மை யென்று நன்றாகத் தெரிந்துகொண்டார். அத்தோடு அவன் தன்னைக் கண்டுகொண்டான் என்பதையும் தெரிந்துகொண்டார். ஆனால் அவனிடம் தான் எதுவும் தெரிந்துகொள்ளாதது போலவே நடந்துகொண்டார்.

மல்லிகைப் பந்தலின் அடியில் சுந்தரேசன் கிழித்துப்போட்ட கடிதத்தைப் பற்றி அவர் கேட்டவுடனேயே அவன் கலங்கிப்போனான். ஆனால், உணர்ச்சிகளை உடனுக்குடன் மாற்றி மறைத்துக்கொள்ளும் கலையில் வல்லவனான சுந்தரேசன் சட்டென்று தன் திகைப்புணர்ச்சியைக் குறைத்துக் கொள்ள முயன்றான். ஆனால், அதற்குள் அவனுக்கு வேறொரு புது யோசனை உதயமாகியது. அப்படியே கவலையுணர்ச்சியைத் தன் முகத்தில் சற்றேனும் மாறாமல் மறையாமல் கூடாமல் குறையாமல் தேக்கி வைத்துக்கொண்டு, மெதுவான குரலில், "என் கஷ்டத்தை நீங்கள் ஏன் கேட்கிறீர்கள்?" என்றான்.

பெற்ற தகப்பனிடமே கற்ற வித்தையைக் காட்டும் பிள்ளையைப் போலத் தன்னிடம் சுந்தரேசன் நடிக்கிறான் என்பதை அறிந்த அண்ணாமலைப் பண்டிதர் அவனைக் காட்டிலும் அருமையாக நடித்தார்.

"தம்பீ! அப்படி உனக்கென்ன கஷ்டம்? என்னிடம் தாராளமாகச் சொல். என்னால் முடிந்தால் நான் உனக்கு எத்தகைய உதவி வேண்டுமானாலும் செய்கிறேன்" என்றார்.

"ஐயா! நீங்கள் தமிழாசிரியர் உங்களிடம் நூல்களை வேண்டுமானால் கேட்கலாம். புத்திமதிகளை எதிர்பார்க்கலாம். உடல் உழைப்பினால் வரக்கூடிய உதவி ஒத்தாசையை வேண்டுமானால் பெறலாம். ஆனால் எனக்கு வேண்டியது இவையெல்லாம் அல்லவே" என்றான்.

"தம்பீ, விஷயத்தைச் சொன்னால் அல்லவா விளங்கும். பணம் எதுவும் வேண்டுமானாலும் நான் உனக்குத் தயார்ப் பண்ணித் தர முடியும்" என்று குசுகுசுத்த குரலில் சொன்னார்.

சுந்தரேசன் அவரை உற்று நோக்கினான். ஒருவேளை அவருக்குத் தன்னைப் பற்றித் தெரிந்திருக்குமோ—தெரிந்துகொண்டே ஆழம் பார்க்கிறாரோ என்று விநாடி நேரம் சந்தேகம் தோன்றியது. ஆனால் பண்டிதர் எங்கோ ஆகாயத்தை நோக்கிக்கொண்டிருந்தார். அங்கே காணப்படாத நட்சத்திரங்களை அவர் தேடிக்கொண்டிருப்பது போலிருந்தது. அவருடைய முகத்தில் அவன் சந்தேகப்படும்படியாக எந்தக்குறியும் தென்படவில்லை.

"பண்டிதரே! பத்து அஞ்சு என்றால் நீங்கள் தயார்ப் பண்ணிக் கொடுக்க முடியும். ஆனால் எனக்கு வேண்டியது பெருந்தொகை—மிகப் பெருந்தொகை!" என்றான் சுந்தரேசன்.

"தொகையைத்தான் சொல்லேன், முடியுமா என்று பார்க்கிறேன்"

"இரண்டாயிரம் ரூபாய்!" என்றான் சுந்தரேசன்.

"பூ! இரண்டாயிரம் ரூபாய்தானா?" என்று சட்டென்று கேட்ட பண்டிதர் பிறகு விழித்துக்கொண்டவர்போல், "ஆமாம், ஏன், தம்பீ! இவ்வளவு பெரிய தொகை எதற்கு? ஏதேனும் வியாபாரம். ஆரம்பிக்கப்போகிறாயா?" என்று கேட்டார்.

"இல்லை, பண்டிதரே என் நண்பன் ஒருவனிடம் அவசரத்திற்குக் கடன் வாங்கியிருந்தேன். அவன் இப்பொழுது திருப்பிக் கேட்கிறான். என் கையிலோ பணமில்லை. என் தாயாரிடம் வாங்கிக் கொடுக்கலாம் என்றாலும் இப்போது முடியாது. வயல் விளைந்து வந்தால் தான் அவள் கையில் பணமிருக்கும். அவனோ இப்போது மிக அவசரமாகக் கேட்கிறான்: என்ன செய்வதென்று புரியவில்லை" என்று ஒரு பச்சைப் புளுகை அள்ந்துவிட்டான் சுந்தரேசன்.

"உன்னைப் போன்றவர்கள், வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கக்கூடிய நிலையில் இல்லாவிட்டால் கவலையாகத் தான் இருக்கும், தம்பீ! எனக்குத் தெரிந்த ஒருவரை உனக்குப் பணம் தரச் சொல்லுகிறேன். ஆனால், அதற்கு நீ சென்னை போக வேண்டும்" என்றார் பண்டிதர்.

"ஐயா! சென்னை யென்ன, இலண்டனுக்கே வேண்டுமானாலும் போய் வருகிறேன். என்னுடைய இக்கட்டுத் தீர்த்தால் போதும்" என்றான் சுந்தரேசன்.

"சரி, இந்தப் பணத்தை எப்போது தம்பி, திருப்பித் தருவாய்!" என்று கேட்டார் பண்டிதர்.

திருப்பிக் கொடுக்கும் எண்ணம் சுந்தரேசனுக்குக் கொஞ்சம் கூடக் கிடையாது. இருந்தாலும், "நெல் விளைந்து வரட்டும். தை மாதம் கொடுத்துவிடுகிறேன்" என்று சத்தியவான் அரிச்சந்திரன் பரம்பரைபோல் சொன்னான்.

"சரி, தம்பீ, நீ எப்போது சென்னைக்குப் புறப்படுகிறாய் என்று சொல். நான் என் நண்பருக்குக் கடிதம் கொடுக்கிறேன். நீ அதைக் கொண்டு போய்க் காட்டிப் பணம் வாங்கிக் கொள்ளலாம்" என்றார் பண்டிதர்.

சுந்தரேசனுக்கு ஒரு சின்ன சந்தேகம் எழுந்தது.

"பண்டிதரே! கையிலிருக்கிற காசைச் செலவழித்துக்கொண்டு பட்டிணத்திற்குப் போய், அங்கு பணம் கிடைக்காவிட்டால்...?" என்றான்.

"தம்பீ! ஏதோ கஷ்டத்தில் இருப்பவனுக்குச் சமயத்தில் உதவி வைப்போமேயென்று நான் முன்வந்தேன். உனக்குச் சந்தேகமாக இருந்தால் போகவே வேண்டாம். எனக்கும் பொறுப்புவிட்டதுபோலிருக்கும்" என்று வெறுப்பான குரலில் பேசினார் அண்ணாமலைப் பண்டிதர்.

சுந்தரேசனுடைய சந்தேகம் பறந்துபோய்விட்டது.

"ஐயா, மன்னிக்க வேண்டும். உங்களைப் புரிந்து கொள்ளாமல் பேசிவிட்டேன். கோபித்துக்கொள்ளக் கூடாது" என்று கெஞ்சினான் சுந்தரேசன்.

"சரி, தம்பீ, நீ எப்போது சென்னைக்குப் புறப்படுகிறாய்?" என்று 'வெடுக்'கென்று கேட்டார் பண்டிதர்.

"நாளைக்கு" என்று மேலும் குழைந்துகொண்டே சொன்னான் சுந்தரேசன்.

"சரி நான் என் நண்பருக்குக் கடிதமெழுதி வைக்கிறேன். நீ நாளை அதை வாங்கிக்கொண்டு போய்வரலாம்" என்றார் பண்டிதர்.

சுந்தரேசன் அப்போது அவரைப் பார்த்த பார்வையில் நன்றியுணர்ச்சி அப்படியே ததும்பி வழிந்தது என்று சொல்லலாம். ஆனால், மனத்திற்குள்ளே தான் அவரை ஏமாற்றிவிட்டதாக எண்ணி மகிழ்ச்சி அடைந்தான்.

தொடரும்

வாழ்வாயோ ? சாவாயோ ? இந்த மேதைகளை எங்குதான் கண்டாயோ ?

— 5-ம் பக்கத் தொடர்ச்சி —

பொருளில்லா அரக்கன்இராவணன்'' என்ற கம்பரின் வம்புப் பேச்சை மறுத்துக் காட்டிய அறிஞர் அண்ணுவின் நாடகம் ''நீதிதேவன் மயக்கம்''! பதினைந்து ஆண்டு காலத்திற்கும் மேலாக எந்தக் கம்பதாசரும் மறுத்துவிடத் துணியாத கருத்துக்களை அந்த நாடகத்தில் காணலாம்! பெரும் புலவர்களும் பேராசிரியர்களும் நீதிமன்றத் தலைவர்களும் பாராட்டிய அந்தச் சொல்லோவியம் சுப்பிரமணியத்தின் சிந்தனைக்கு அப்பாற்பட்டதாகும்! மதி அமைச்சர் இப்போதுகூடச் சொல்லட்டுமே ''இரக்கம் என்ருல் என்ன ?''-என்ற வினவுக்கு விடை! ''ரோமபுரி ராணிகள்'' படித்திருக்கும் அமைச்சர்களுக்கு இந்தக் கேள்வி சிறிய கேள்வியாக இருக்கலாம். இதற்கு விளக்கம் சொல்லித் தோற்றவர்கள பட்டியலிலே பெரிய பண்டிதர்களும் உண்டு என்பதை அவர் முதலில் தெரிந்துகொண்டு, அதன் பிறகு விடை தேட முயல வேண்டும்! முத்தமிழும் தவழும் வகையில் சிறப்பான எழுத்தோவியங்கள் பல தந்தவர்கள் முன்னேற்றக்கழகத்தவர்கள்! இதனை அமைச்சர் சுப்பிரமணியம் அறிந்திருக்க வேண்டும். அல்லது அவருடைய தகுதி அதனை மறைத்திருக்க வேண்டும்! எழுத்துக் கலை கதை கவிதை கட்டுரை இப்படிப் பல வண்ணங்களிலே தழைத்திடச் செய்தவர்கள் முன்னேற்றக் கழக எழுத்தாளர்கள் என்பதை மதி அமைச்சராலே ஏற்றுக்கொள்ள முடியவில்லையென்ருல் தான் அமர்ந்திருக்கும் மந்திரி நாற்காலியிலே முட்டி மோதிக்கொள்ள வேண்டுமே தவிர பல்லாலே கடித்து உதட்டைக் காயப்படுத்திக் கொள்வதில் பலனில்லை!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கலையுலகச் சாதனையைக் கண்டிருக்கும் சுப்பிரமணியம் 'கதை' கட்டிப் பிழைக்க எண்ணினூர். ஆனுல் அவருக்கு வேறு சான்றுகளைக் காட்ட விரும்பவில்லை. திராவிட இயக்கத்தின் வரலாற்றினை மறக்காதவர்கள் அறிஞர் அண்ணுவின் அரசியல் கருத்து விளக்கக் கட்டுரைகளை மறக்கமாட்டார்கள். சுப்பிரமணியம் படித்திருக்கிற 'இலட்சிய வரலாறு' அவருக்குப் புதிய பாடம் புகட்டிய அறிவேடு! திருநாட்டின் விடுதலைக்குத் தேவையான படைக்கலன்களைத் தேடித்தந்த பெருமையெல்லாம் அறிஞர் அண்ணுவின் 'திராவிடநாடு' இதழுக்கு உண்டு! அதிலேதான் 'கலிங்கராணி' பிறந்தாள்! 'ரோமாபுரி ராணிகள்' உலவி, சுப்பிரமணியம் பக்தவத்சலம் போன்றவர்கள் இன்று பரவசப்பட்டு படிப்பதற்கும் 'திராவிட நாடு' இதழ் காரணம்! அமைச்சர்கள் படிக்காத எத்தனையோ அரசியல் கதைகள் அங்கே உண்டு! காந்தியாலே கவனிக்கப்படாத காமராசர்-''கூப்பிடு தூரத்தில் இருந்தேன்; மகாத்மா என்னைக் கவனிக்கவில்லை''என்று காமராசரே அறிக்கை வெளியிட்ட நேரத்தில் அவரது அழுகுரலைக் காங்கிரசுக்காரர்களேகூடக் கேட்காத நேரத்தில்-கல்கிகள் ''காமராசருக்குச் சின்னத்தலைதான் இருக்கிறது; தமிழ்நாட்டுக் காங்கிரசின் தலைவர் பதவி பெரிய பதவி - இவர் அதற்கு லாயக்கில்லை'' என்று சொல்லிக்கொண்டிருந்த நாட்களில் அண்ணு எழுதிய ''காமராசர் சிந்தும் கண்ணீர்'' என்ற கட்டுரை இன்னும் இருக்கிறது. சுப்பிரமணியத்திற்கு - ஆச்சாரியாரின் கள்ளக்காதலனுக்கு- ஆசையிருந்தால் அதனைப் படித்துப் பார்க்க முயலட்டும்! பாதகத்தான் என்று சித்தரிக்கப்பட்ட பாகித்தான் எப்படிப்பட்டது என்பதை பாரதமாதாவின் புதல்வர்கள் எதிர்ப்பது அறிவீனம். என்றேனும் ஒருநாள் காந்தியாரின் சீடர்கள் அதனை சின்னுவின் காலடியில் வைத்து ஏற்றுக்கொள்ளும்படி சொல்லத்தான் போகிருர்கள்;அந்தக் காலம் விரைந்து வருகிறது - என்று அண்ணு பல கட்டுரைகளிலேசொன்ஞர்: அதுபோலவே கதராடைக்காரர்கள் செய்துகாட்டிஞர்கள். கதைதான் எழுதத் தெரியும் என்று பேசுகிற சுப்பிரமணியங்கள் கொஞ்சம் எண்ணிப்பார்த்தால் அண்ணுவின் பேனுவுக்குள்ள வன்மை தெரியும்! வசைபாடுவது வம்பர்களுக்கு ஏற்ற வேலையாக இருக்கலாம்.வழக்கறிஞர் பட்டம் பெற்ருலும் வழக்காடத் தெரியாத சுப்பிரமணியம் வம்பு மடத்துப் பேர்வழிகளைப்போல அரசியல் பேசலாமா?

திராவிட முன்னேற்றக் கழத்தைத் தாக்கித் தகர்க்க வந்த தந்திர மந்திரி தன்னைப் புகழும் தந்திரிகளின் மனம் மகிழ்வதற்காக மட்டரகமான உரைகளை மேடையிலே தருகிருர்! மதுரையிலும் மற்ற இடங்களிலும் அவர் கேட்டிருக்கிருர். ''திராவிட நாடு பெறுவதற்காக ஏன் 'நாடோடி மன்னனை' கேரளத்திற்கு அனுப்பவில்லை?'' என்று அரசியல் காரணங்களிலே உறுதியாக நிற்கமுடியாதவர்கள்-நொண்டிகளாக இருப்பவர்கள்-எதனைச் சொல்வார்களோ அதனைத்தான் அமைச்சரும் சொல்கிருர். 'நாடோடி மன்னன்' புகழ் பாடிய நேரத்தில் பரிசுகள் வழங்கிப் பட்டயங்கள் கட்டிப் பெருமைப் படுத்திய நேரத்தில் சுப்பிரமணியம் அவர்கள் அடிபட்டு வீழ்ந்தாலும்மண் தின்னவில்லையே என்று பெருமைப் பட்டுக்கொள்பவர்-'நாடோடி மன்னனைக் கேரளத்திற்கு அனுப்புவது தானே? என்று கேட்டிருந்தால் மன்னனை மட்டுமா - மந்திரியையும் கட்டி அனுப்பியிருப்பார்கள்! மானங் கெட்டவர்கள்தான் தரங் கெட்ட வார்த்தைகளைப் பேசுவார்கள். ஆனுல் மதிப்பிற்குரிய மந்திரியாரை எந்தப் பட்டியலிலே சேர்த்துக் கொள்வதென்று அவருடைய வார்த்தைகளிலேயிருந்து கணக்கிட முடியவில்லை! மன்னிப்போம்; மறப்போம்! திராவிட நாட்டுப் பிரச்னையை விட்டு விட வேண்டுமென்று முன்போர் முறை சட்ட சபையில் சொன்ன வார்த்தைகளை மதி மந்திரியார் மதுரைப் பொதுக் கூட்டத்திலும் கேட்டிருக்கிருர். புதிய கல்வித் திட்டம் வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்த மந்திரி அதற்குப் புதை குழி வெட்டியதைப்போல முன்னேற்றக்கழகத்தவரையும் எண்ணிக்கொண்டு பேசுகிருர். பதவி ஆசைகளுக்குப் பணிந்து நெஞ்சத்து நினைப்புகளைக்கூட மாற்றிக்கொள்ளும் மனப்பண்பு எங்களுக்கில்லை என்பதை உணர வேண்டும். சுப்பிரமணியத்தின் கார்டியன் எனப்படும் கனம் காமராசர் போகிற இடங்களில் இன்றும் அன்றும் சொன்ன புலம்பலையே புதிய இசையாக்கிக் காட்டுகிருர்! சுப்பிரமணியம் நாட்டுப் பிரிவினையை விட்டுவிட வேண்டுமென்ருர். ஆனுல் காமராசர் திராவிடம் எங்கேயிருக்கிறது என்று கேட்டு- கல்லூரிக்கும் கடைத் தெருக் கருப்பட்டி வியாபாரத்திற்கும் உள்ள வேறுபாட்டைத் தெளிவாகக் கூறியுள்ளார்! 'முட்டாள் தனமானது' என்று சஞ்சீவி ரெட்டியார் அவர்கள் வேறு ஒரு பிரச்னையைக் குறிப்பிட்டார்-காமராசருடைய பேச்சுக்கும் இந்தச் செய்திக்கும் எவரேனும் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டால் அவர்களைக் குறைகூற எந்தவித நியாயமில்லை! தமிழ்நாட்டு அரசியலில் எவரும் எதை வேண்டுமானுலும் பேசிக்கொள்ளக்கூடாதென்ற நியதியை காமராசரைப் போன்றவர்கள் தெரிந்துகொள்ளும் காலம் வரையில் இப்படிச் சில கடுமையான நிலமைகளைச் சந்திக்க வேண்டும்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் சென்னை சர்க்காரின் அமைச்சர்கள் குறைத்து மதிப்பிடுவதற்குக் காரணம் அவைகளின் பெருமைகளை மற்றவர்கள் போற்றுவதினுல்தான்! நான்கு மாநிலங்களின் கூட்டுறவு தேவையென்று காமராசர் முன்னிலையில் சஞ்சீவியார் சொன்னுர். காமராசர் வதனம் விளக்கெண்ணெய் முகமாக மின்னியது என்று நேரில் பார்த்தவர்கள் சொல்லுகிருர்கள். அதே சஞ்சீவியார் காமராசரையும் தோற்கடிக்கும் விதத்தில் திராவிட நாட்டுப் பிரச்னை முட்டாள்தனமானது என்று உதகையில் கூறினுர். நாட்டில் நடைபெற்று முடிந்துவிட்ட எத்தனையோ நிகழ்ச்சிகளை நேருவும் நேருவின் சேவடி தாங்குவோரும் முட்டாள்தனம் என்றுதான் ஏசினுர்கள். அண்மையில் மலர்ந்த மராட்டிய மாநிலம் மறந்து போன அந்தப் பாடத்தை இன்றும் நிலைநாட்டியுள்ளது. சஞ்சீவியார் இங்கே வந்து பெறுகின்ற விருந்துக்குப் புதிய மருந்து தருவது தருவதுபோல, நாட்டுப் பிரிவினையைப்பற்றி வாயில் வந்ததைக் கொட்டிவிடுகிருர்! ஆனுல் காமராசர் - தன்னுடைய தஞ்சை மாவட்டப் பேச்சுக்களிலே மறக்காமல் முன்னேற்றக் கழகத்தினைத் தூற்றியிருக்கிருர்! பெரியாரோடு தொடர்புகொள்ளாவிட்டால் பெருமையில்லை என்று கருதி அவர் விருப்பம்போல் நடித்துக்கொண்டிருப்பவர், நமக்கு அந்த யோசனையை, வேண்டாத ஆய்வுரையைத் தருகிருர்! காமராசர் கூட்டாட்சியென்ருல் என்ன என்பதற்குச் சரியான விளக்கம் சொல்லி அந்த அடிப்படையில் அமையாதது 'திராவிட நாடு' என்று விளக்கியிருந்தால், காமராசருக்குக்கூடச் சிந்திக்கும் திறன் உள்ளது என்று சிறிது நேரத்திற்காவது நாமும் ஒப்புக்கொள்ளலாம்! தன்னைப்பற்றியது தவிர, தன் பதவியைப்பற்றியது தவிர வேறு எந்தத் தத்துவ விசாரணையிலும் எண்ணத்தைச் செலுத்தி விசாரப்பட்டுக் கொள்ளாதவர்தான் திராவிடநாட்டுப் பிரிவினைக்குத் தேவையற்ற சாயம் பூசித் தருகிருர். திராவிட நாட்டின் பெருமைகளைச் சொன்னுல் ஏற்றுக் கொள்ளும் பக்குவம் பாரதமாதா புதல்வர்களுக்கு நிச்சயமாக இல்லை என்பதற்குக் காமராசர் நிறைய வாய்ப்புகளைத் தந்திருக்கிருர்!''உலக வரலாறு படித்திருக்கும் காரணத்தால் உரிமை பெற்ற நாடுகளையும்- விடுதலை விடுதலை என ஏடுகள் கூறும் செய்திகளையும் தெரிந்து வைத்திருக்கிறேன். திராவிட நாடும் விடுதலை பெற வேண்டுமென்று விரும்புகிறேன். இவைகளையெல்லாம் படிக்காத காமராசர் எதையும் பேச முடிகிறது'' - அறிஞர் அண்ணுவின் அறிவு மொழிகளிலே இது ஒரு சிறு துளி! இனி, காமராசர் எவ்வளவு தான் மட்டமான வார்த்தைகளைத் தேடியெடுத்துப் பேசினுலும் அவர் மேல் நமக்கு அனுதாபம் ஏற்படுமே தவிர அருவருப்பு வரத் தேவையில்லை! அவருக்குள்ள அரசியல் அனுபவமும் அவ்வளவுதான்.

திராவிட முன்னேற்றக் கழகம் நிலப் பிரபுக்களின் கூடாரமாக உள்ளது என்றும் அது அணிந்திருந்திருக்கும் முகமூடியைக் கழற்றி இதனை நான் தெரிந்துகொண்டேன் என்றும், வாய்ப்புக் கிடைத்தாலும் சட்ட சபையில் வாய் திறக்கத் தெரியாத காமரரசர் வாய்கிழியப் பேசியிருக்கிருர்! எவ்வளவு வேதனை-துன்பமாக இருந்திருக்கும்! போகிற இடமெங்கும் மாளிகை வாசிகளைச் சந்திக்கிற மந்திரியார் முன்னேற்றக் கழகத்தின் முகமூடியை கிழித்து விட்டார் என்று கூடச் சொல்லத் துணிவு வருகிறது. காரணம் அவரது வார்த்தைகளுக்கு இலக்கண இலக்கியக் காரணங்களை வைத்து அவைகளை எவரும் கணக்கிடப் போவதில்லை! ''இலக்கணம் இலக்கியம் என்ருல் என்ன? இரண்டிற்கும் இடையில் தொடர்புகள் உண்டா?'' என்பதும் அவருக்குத் தெரியாது! இவருக்கு மறுப்புத் தரும் அண்ணுஅவர்களோஎல்லாத் தன்மையிலும் தனக்கென இலக்கண முறைகள் வகுத்து-அவைகளுக்கெல்லாம் தானே சிறந்த இலக்கிய அமைப்புகளாகப் பல கோணங்களிலே பல வண்ணங்களிலே வளர்ந்திருப்பவர் ஆவார்! அறியாமையும் அதிகாரமும் அலங்கார பீடத்திலேயிருப்பதால் அறிஞரும் அவர் தம் அன்புக்குரியவர்களும் அடிமைத்தளை அறுக்கும் பணியிலே பிணைத்துக்கொண்டுள்ளனர்! கனம் காமராசர்களுடைய கணக்கை எண்ணிப் பார்க்கும் எவரும் இந்த முடிவினைத்தான் சொல்லுவார்கள்! படித்த மேதையும் பகுத்தறிவுக்குப் புறம்பான பாதையில் இருப்பவருமான வெங்கட்டராமன்கூட அண்ணுவுக்குப் பொருளாதாரம் தெரியாதென்று பேசுகிருர்! பக்தவத்சலம் ஒரு கோவில் பூனை-அரசியலும் தெரியாது, அறநிலையப் பாதுகாப்பிலே தன் அமைச்சுத் துறையைப் பாழ்படுத்திக் கொண்டிருப்பவர்! கக்கனைபபற்றிக் கதை கதையாகக் கூறலாம்; காலம் இடந் தரவில்லையே! இராமையாவின் மின்னல் வேகச் சுற்றுப் பயணம் விண்ணப்பங்கள் கேட்டு வாங்கி, எரிச்சலைக் காட்டிக்கொள்வதற்குள்ள தகுதியைத்தான் கேட்டிருக்கிறது. அவருடைய திருப்பத்தூர் வட்டாரச் சுற்றுப் பயணத்தைக் கண்டவர்கள் இன்றும் சொல்லிச் சொல்லி சிரிக்கிருர்கள்! மந்திரி மாணிக்கவேலர் மாமேதை; நினைத்தால் புலப்புவார், அவரது பழைய வரலாற்றின் நிலைமை அவருடைய அமைச்சர் பதவிக்கு உலை வைக்கக் கூடியது இருந்தாலும் நல்ல காங்கிரசுக்காரராக நடிக்கத் தெரியவில்லையே! கன்னியா குமரியின் அம்மையார்-அமைச்சர் பதவியின் அருகதையை உணர்ந்தவராகவும் அதற்கேற்பப் பேசியவராகவும் தென்படவில்லை! இப்படி எட்டு மந்திரிகளின் திட்டமற்ற பேச்சுக்களை நம்பி முன்னேற்றக் கழகத்தின் அரசியலைத் தீர்த்துக் கட்டிவிடமுடியும் என்று எதிர்பார்க்கிருர்கள்! நாட்டைமறந்து விட்டவர்கள் நாட்டு விடுதலைக்குப் பணியாற்றும் நல்லவர்களைத் தூற்றுவது எங்கும் நடைபெறுவதுதான்! முன்னேற்றக் கழகத்தின் எதிர் காலத்தை கணிக்கத் தெரிந்தவர்கள் கண்ணியம் பெற்றவர்கள்-நம் கடமையை நினைவூட்டுகிருர்கள்! நாம் காலத்தை வென்று கழகத்தை வளர்த்திடுவோம்! ஆம்! இனி இந்த அமைச்சர்களை நம்பிப் பயனில்லை! ஏனென்ருல் அந்தப் ''பெரிய மனிதர்கள்'' நாட்டில் நடக்கும் அவலங்களைக் கேளார்; காணுர்; பேசார்!

—கூடலரசன்,

துடித்தெழுந்தான்; தாக்கிற்று தடியாட்சி!

— 4-ம் பக்கத் தொடர்ச்சி —

தொடர்பு அறுந்தது! இல்லை அப்படி அறும்படி ஆக்கினர்கள் உருசியக் குழுவினர். மணவிலக்குக்குப் பிறகு அந்தக் குழுவின் தொல்லை என்னைத் தொடரவில்லை. எங்களது நலத்தை முன்னிட்டுத்தான் இந்த ஏற்பாட்டை அவர் செய்துமுடித்திருக்கிருரென்பதைப் போகப் போகத்தான் உணர்ந்தேன். ஆனாலும், மூத்தவன் பாலை அவரது பாதுகாப்பிலே விட்டுவைக்க எனது மனதுக்கு ஒப்பவில்லை. சரியான கவனத்தோடு அவன் வளரவில்லை என்பதோடு, சர்வாதிகாரம் படைத்த உருசியக் குழுவுக்கு ஏற்றமுறையிலே அவன் பக்குவப்படுத்தப்படுவதையும் அறிந்து, குழந்தையை என்னிடம் ஒப்படைக்கும்படி அரசினரிடம் வேண்டினேன். பால் இதை கடுமையாக எதிர்த்தார். காலப்போக்கிலே எனது முடிவுக்குத்தான் அவரால் வரமுடிந்தது. பாலை என்னிடம் ஒப்படைத்துச் சென்றுர். போன செல்வம் திரும்பியதிலே எங்களுக்கு அளவிட முடியாத மகிழ்ச்சி.

அதற்குப் பிறகு 1955 ல் மலெட்டர் ஸ்டுடியோவுக்கு, 'போன்' செய்தார். அதுதான் நான் அவரோடு பேசிய கடைசிச்செய்தி! அதற்குப் பிறகு அவரது குரலை நான் கேட்க முடியாதவளாகிவிட்டேன். இந்த நேரம் பார்த்து என் தாயும் இறந்துவிட்டாள். என் ஆதரவற்ற தன்மையை அவர் எவ்வளவோ உணர்ந்து வருந்திஞர் என்றுலும், நாங்கள் சந்தித்துக்கொள்ளும் சந்தர்ப்பம் தோன்றுமலே போய்விட்டது.

1956-ம் ஆண்டு, அக்டோபர் மாதம் 23 ந் தேதி அங்கேரிய மக்கள் விடுதலைக்குரல் கிளப்பினர். நாட்டுமக்களின் ஏகோபித்த குரலொலி எங்கும் எதிரொலிக்கத் துவங்கியது. 'அடிமை வாழ்வு போதும். அல்லற்பட்டு ஆற்றுது வடிக்கும் கண்ணீர் ஆதிக்கப் படையைத் தேய்க்கட்டும். புலிவாழ்வு-புதுவாழ்வு துவங்கட்டும்' என்ற போர் முழக்கம் கிளப்பிப் புறப்பட்டனர் அங்கேரிய விடுதலை விரும்பிகள். 'Russians go home' என்ற அட்டைகளைத் தாங்கிப் பிடித்துக்கொண்டு வீதியெங்கும் பவனி வந்தனர். பாராளும் மன்றத்தின் முன்னே இரண்டு இலட்சம் மக்கள் கூடி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

மக்கள் சக்தியைத் தாங்கமுடியாத உருசிய மேலிடத்தார் ஆதிக்க பீடத்தைவிட்டு இறங்கிவந்தனர். அதே அக்டோபர் மாதத்திலேயே அதாவது மக்கள் சக்தி உரக்கக் குரலெழுப்பிய ஒரே வாரத்திலேயே, அங்கேரிய புரட்சி வெற்றியோடு முடிந்தது! சோவியத் படைகளை அங்கேரியிலிருந்து திரும்பப் பெற்றுக் கொள்வதாக அறிவித்தனர்.

மக்கள் சக்தி துவக்கி வெற்றி கண்ட அந்த மகத்தான போராட்டத்திலே அங்கேரிய வீரனொருவனைப் பற்றி, நாடே பலபடப் புகழ்ந்து பேசியது. அவனது நாட்டுப்பற்றையும், அதன் காரணமாக எழுந்த வீர தீரத்தையும் எல்லோருமே வரவேற்று மகிழ்ந்தனர். நானும் அந்த வீரனைப் பற்றிய விபரத்தை அறிய முயன்றேன். அந்த வீரன் யார் தெரியுமா? நமது மலெட்டர்தான்! ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? நானும் அப்படித்தான் திகைத்துப் போய்விட்டேன். உருசியக் குழுவிலே பிரதான பதவி வகித்த மலெட்டர் எப்படி அங்கேரிய மக்கள் புரட்சிக்குத் தலைமை தாங்கினுரென்பதை நினைத்துப் பார்த்தும் முடிவுக்கு வரமுடியவில்லை! ஆமாம் இதற்குத்தான் நாட்டுப்பற்று என்ற பெயர் போலும். அவரும் அங்கேரிய நாட்டைச் சேர்ந்தவர்தானே! இருக்காதா நாட்டு விடுதலை வேட்கை அவருக்கும்? மேலும் அவர்தான் முன்னர் அடிக்கடி கூறினுரே! "மரியா-பொதுவுடைமையர்களோடு நான் கலந்திருப்பதன் காரணம் முழுக்க முழுக்க அவர்களை ஆதரித்துவிட அல்ல. அவர்களைப் பற்றி நன்ருகத் தெரிந்துகொள்வதற்குத்தான்!" என்று கூறியதன் முழு அர்த்தத்தையும் இப்போதுதான் என்னுல் புரிந்துகொள்ள முடிந்தது.

சோவியத் பட்டாளம் அங்கேரியை விட்டுத் திரும்பின பிறகு, அங்கேரிய சுதந்தர மக்களரசு உதயமாகியது. இம்ரி நாகி (Imre Nagy) யின் தலைமையிலே புதிய மந்திரிசபை அமைந்தது. அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். நாட்டு மக்களுக்குத் தேவையான திட்டங்கள் சட்டமாகின. மலெட்டர் மந்திரி சபையிலே பாதுகாப்பு மந்திரியாக அங்கம் வகித்தார். நவம்பர்-1-ந்தேதி மலெட்டர் வானெலியிலே பேசினுர். அவரது நீண்ட பேச்சிலே... 'We must ensure milk for our children, coal for our factories, regular transport for our workers' என்று குறிப்பிட்டார். அந்தப் பேச்சின் இந்தப் பகுதி மிக நன்ருகப் பிடித்துப் போய்விட்டது. அதைப் பாராட்டி மிகப் பெரிய அதிக அனுபவம் பெற்ற மனிதரைப்போல பால் தனது தந்தைக்குக் கடிதமெழுதினுன். நண்பரொருவரை அனுப்பி எங்களின் நலத்தை விசாரித்தார் மலெட்டர்.

மலெட்டரின் வானெலிப் பேச்சுக்குப் பிறகு சோவியத் அரசாங்கம் அங்கேரிக்கு அருகேயிருந்த அவர்களது வட்டாரத்திலே ஆலோசனைக் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்தது. அந்த இரகசியக் கூட்டத்துக்கு மலெட்டரும் அழைக்கப்பட்டிருந்தார். சிங்கத்தின் குகைக்கே அங்கேரியத் தலைவனும் சென்றுன். ஆனுல், நடந்ததோ ஆய்வுக் கூட்டமல்ல; சதிக் கூட்டம் அங்கே நடந்து முடிந்தது. மலெட்டரும், அவரது தோழர்களும் கைது செய்யப்பட்டார்கள் சோவியத்சர்வாதிகாரிகளால். அதை தொடர்ந்தே நவம்பர் 4-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலையிலேயே புதாபெஸ்ட் மீது உருசியர்கள் படையெடுத்துத் தாக்கினுர்கள். சுதந்திர அரசு சுக்குநூருக்கப்பட்டது அங்கேரிய விடுதலை விரும்பிகள் நசுக்கப்பட்டனர். சுதந்திர அரசியலிலே மந்திரியாக யிருந்தவர்களெல்லாம் உருசியர்களால் இழுத்துச் செல்லப்பட்டனர். மந்திரிகளுக்கே அந்தக் கதியென்றுல் சாதாரண மக்களாகிய எங்களைப்பற்று சொல்லவும் வேண்டுமோ? துடிதுடித்தோம். உண்ண உணவின்றி, இருக்க இடமின்றி அலைந்து திரிந்தோம்!

முடிவாக நாட்டை விட்டு வெளியேறத் திட்டமிட்டேன். அப்போது சின்னஞ்சிறு சூடித் நச்சுக் காய்ச்சலால் அவதிப்பட்டாள். அவளையும் எங்களுடனேயே அழைத்துச் செல்வது அவளது உயிருக்கே ஆபத்தாக முடியுமென்று கருதிய நான் சூடித்தை புதாபெஸ்டிலேயே விட்டுச் சென்றேன். நான் துவங்கவிருந்த முடிவில்லாத தொல்லைகள் சூழ்ந்த பயணத்திலே அவளும் வந்து உயிர் பிரிவதைவிட, புதாபெஸ்டிலேயிருந்தால் ஒருவேளை அவளுக்கு உயிர் தப்பும் என்று கருதித்தான் அப்படிச் செய்தேன். சூடித்தைப் பிரிவது, என்னருமை அங்கேரியைப பிரிவதிலிருந்த வேதனையைவிட அதிகமாகயிருந்தது! சகித்துக்கொண்டு பயணத்தைத் துவக்கினேன். அதிகாலையிலேயே, தெருவருகிலிருந்த வரத்தடியிலே லாரி வந்து நின்றது. லாரியினுள்ளேயிருந்த காலிக் கூடைகளுக்கிடையே நானும் பாலும் மரியாவும் ஒளிந்துகொண்டோம். லாரி புறப்பட்டுச் சென்றது. வழியெல்லாம் எவ்வளவோ சோதனைக்குப் பின் ஆத்திரிய எல்லையை வந்தடைந்தேன். அங்கு சென்ற பிறகுதான் சிறுமி சூடித் பத்திரமாக வீயன்னு சேர்ப்பிக்கப்பட்டதை அறிந்தேன். இதற்கிடையே மலெட்டர் உருசியாவுக்கு அழைத்துச்செல்லப்பட்டுச் சிறையிலே தள்ளப்பட்டிருந்தார். 1957-ம் வருடம் நிக்கோலை புல்கானினுக்கு 'எங்கள் தந்தையின் உயிரைக் காப்பாற்றுங்கள்' என்று எனது குழந்தைகள் கடிதமெழுதின. அங்கேரிய விடுதலை தரும்படி உலகமே குரல்கொடுத்தது. உருசிய அரசாங்கம் இதை ஒருவகையிலே ஒப்புக்கொண்டது ஆமாம்! அவர்களுக்கெல்லாம் உலக விடுதலையே தரத் தொடங்கியது!

1958 ஜுன் மாதத்திலே மலெட்டர் தூக்குமேடைக்கு அனுப்பப்பட்டார். உலகம் கண்ணீர் வடித்தது! அங்கேரி தேம்பித் தேம்பி அழுதது. ஆனுல் நான் சிரித்தேன். நாட்டு விடுதலைக்காகத் தலையை விலை கொடுத்த கணவனைப் பெற்றதாலே!

—மா. தங்கவேலர்

"தென்றல்"

நெடுங்கதைப் பரிசுப் போட்டி

இளைய எழுத்தாளர்களை ஊக்குவிக்கவும், புதியனவான அணிகள் பல தமிழ் மகளுக்குச் சூடவும் "தென்றல்" எடுத்துக்கொள்ளும் முயற்சிகளை நண்பர்கள் அறிவர். "தென்றல்" 1955-ல் நடத்திய நெடுங்கதை, காவிய, நாடகப் போட்டிகளை வரவேற்ற தமிழகம் இப்போது நடத்தப்பெறும் நெடுங்கதைப் போட்டியையும் வரவேற்கும் என்றறிவோம். தென்றல் நண்பர்கள் அனைவரும் இப் போட்டியில் பங்கு கொள்ள அழைக்கிருேம். வருக! வருக!

விதிகள் :

1. தோழர்கள் அனுப்பும் கதைகள் தமது சொந்தக் கற்பனையால்' தமிழகச் சூழலுக்கேற்ப எழுதப்பட்ட நெடுங்கதைகளாக இருக்க வேண்டும்.
2. இந் நெடுங்கதைகள் வெள்ளைத்தாள் அளவில் 200 முதல் 250 பக்கங்கள் வரை அமையலாம். 250 பக்கங்கட்கு மேல் போகக்கூடாது. பக்கத்திற்கு முப்பது வரிகள் அமைதல் நலம்.
3. முடிவு தேதி 30—6—60 ஆகும்.
4. போட்டி நடுவணர்கள் பெயர் 2—7—60 அன்று "தென்ற"லில் அறிவிக்கப்படும்.
5. மொத்தப் பரிசுத் தொகை ரூ. 500-ல், முதற்பரிசு பெற்றவர்க்கு ரூ. 250-ம், இரண்டாம் பரிசு பெற்றவர்க்கு ரூ. 150-ம் மூன்றும் பரிசு பெற்றவர்க்கு ரூ. 100-ம் வழங்கப்பெறும்.
6. போட்டியின் முடிவுகள் 16—7—60 அன்று "தென்றலில்" அறிவிக்கப்படும்.
7. தேர்ந்தெடுக்கப்பெறும் நெடுங்கதைகளை, "தென்ற"லில் வெளியிடும் உரிமையும், பின் நூல் வடிவில் வெளியிடும் உரிமையும் "தென்றல்" அலுவலகத்தார்க்கே உரியன.

கதைகள் அனைத்தும் பதிவு நூலஞ்சலிலேயே அனுப்பப்பெறல் வேண்டும்.

வராதவர் வந்தார்! படாதது பட்டார்!

[கருடாழ்வார் கக்காச்சாரியார் பல இடங்களுக்கும் போவதென்ற பிரயாணத் திட்டத்துடன் வெளியே கிளம்புகிறார். கூலிகள் பலர் காத்திருந்து “சே!” சொல்கின்றனர். “இந்தப் பயலுக கூலியைக் குறைச்சா வாங்கிருனுக? சத்தத்தை ஓங்கிப்போட்டா என்ன?” என்றவாறே வண்டியேறிச் செல்கிறார். காற்றுவேகத்தில் போன வண்டி, ஒரு கிராமத்தின் அருகில் நின்றுவிடுகிறது. வண்டியோட்டி செம்மை செய்வதில் ஈடுபடுகிறார். கிராமத்தவர்கள் கூட்டமாய்க் கூடிவிடுகின்றனர். ஒவ்வொருவரும் அவரை நலம் கேட்கின்றனர்.]

ஒரு பெரியவர் : ஐயா யாரு?

இளைஞன் : தெரியாதா? இவர் தான் மந்திரி கக்காச்சாரியாரு.

பெரியவர் : அப்படியா? எந்த ஊருக்கு மந்திரி!

இளைஞன் : நம்மூர்க்கெல்லாம்தான்.

பெரி : அப்படியா! கும்பிடறேன் சாமி! (எங்கோ கவனமாய்)டே பயலே, சேர் ஏதும் இருந்தா எடுத்துப் போடுங்டா!

இளை : மழை பெஞ்சாத்தான் சேறு வரும்.

பெரி : ஐயா! நீங்க வராதவக வந்திருக்கீக! எப்பவோ, தேர்தலப்போ உங்களைப் பார்த்தது ஞாபகம்...சௌக்கியம்தானே?

கக்காச்சாரியார் : எங்கே வர முடியுதுங்க? ஒரேவேலை! தேர்தல் அப்போதான் ஏதாகிலும் ஓய்வு கிடைக்குது. ஆமா...நீங்க எல்லாம் சௌக்கியமாயிருக்கீங்களா?

பெரி : ஏதோ இருக்கோங்க, உங்க புண்ணியத்திலே. ஆன இந்தச் சோறு தண்ணிக்குத்தான் படாத பாடுபட வேண்டியிருக்கு...விக்காததை எல்லாம் வித்துத் தின்ன வேண்டியிருக்குங்க. என்னமோ, பஞ்சம்மாதிரி பயமா இருக்குங்க!

கக் : இதெல்லாம் ஒரு பெரும் பஞ்சமாங்க? பாருங்க, அந்த நலலதங்காள் காலத்திலே வந்த பஞ்சத்தைப்பற்றிச் சொல்ருங்க, அவபட்ட பாடடைச் சொல்ருங்க, பாருங்க! **தாலி இருக்க மற்ற தங்கமெலாம் விற்ற பஞ்சம்** என்று சொல்ருங்க! அதாவது தாலியைத்தவிர மற்ற பொருளை எல்லாம் விற்றுப் பிழைச்சான்னு. அதைவிட வாங்க இது பெரிய பஞ்சம்?

பெரி : அவளுக்குத் தாலியாகிலும் மிஞ்சிச்சுங்க. ஆன எங்க பொண்ணுக் கிட்ட தாலிகூட மிஞ்சலீங்க. அதை நினைச்சாலே வயிற்றெரிச்சலுங்க; வெட்கக் கேடுங்க! அந்த சூனுமானுக் காரங்க சொல்றமாதிரி தாலி கட்டாமக் கல்யாணம் பண்ணியிருந்தாலும் தேவலீங்க. தாலியை வேறு கட்டிப்புட்டு, இப்ப அறுத்து விக்கிறதானு...என்ன போங்க?

கக் : அப்பனே! காமராசா! (எனக் காதைப் பொத்திக்கொள்கிறார்.)

பெரி : அதாருங்க, உங்கப்பா?

கக் : உங்களுக்குத் தெரியாதா? காமராசுதாங்க எங்க அப்பன்!

பெரி : அப்படியா? காமராசா உங்க அப்பன்? அந்த மனிதருக்கு எப்பங்க கல்யாணம் ஆச்சு?

(கக்காச்சாரியார் விழிக்கிறார். பெரியவர் தொடர்கிறார்)

ஆமாங்க...அப்பனுக்கேற்ற பிள்ளைன்னு உங்களைப்பற்றி ஊரெல்லாம் சொல்வாங்க. ஆமா. உங்க அப்பா செய்ய வேண்டியதெல்லாம் செஞ்சு வைச்சாருங்களா? தம்பி என்னமோ குறள் சொல்வீயடா...?

இளை : “தந்தை மகற் காற்றும் நன்றி அவையத்து முந்திருப்பச் செயல்” என்று சொல்வாங்க. அதாவது சபையிலே மகன் முந்தி உட்காரும்படியாய்வளர்த்துவிடறதுன்னு அருத்தம் சொல்வாங்க!

பெரி : உங்கப்பா உங்களை அப்படியெல்லாம் வளர்த்தாரா? சபையிலே முந்தியிருக்கிறீங்களா?

கக் : ஓ! எங்கவூரு நாடக சபையிலே போய்க் கேட்டுப் பாருங்க! ஆட்டம் ஏழு மணிக்கானு, நான் அஞ்சு மணிக்கே முந்திப் போய் இருப்பேனுங்க. அதிலேயும் குமாரி நந்தநாயகி நாட்டியமின்னு மூனு மணிக்கே போய்க் குந்திவிடுவேங்க. அதிலேயும் முந்திப் போறதோட, முன்னேயும் இருப்பேனுங்க. நந்தநாயகி நாட்டியமின்னு எங்க அப்பாவுக்குக்கூடப் பிரியமுங்க. அவருதாங்க நாடக சபை, சங்கீத சபைகளிலே எல்லாம் முன்னே போயிருக்கனுமின்னு சொல்லிக் கொடுத்தாருங்க.

ஜெயராஜ்.

இளை : அப்பாடா! உங்க புத்தி யாருக்கும் வராதுங்க. அதைக் காலா காலத்திலே இன்சியூர் பண்ணி பாருங்க!

கக் : ஆமா! நீங்க யாரோ வள்ளுவரின்னு சொல்லிக்கிட்டிருந்தீங்களே! யாரு? நம்ம ஊரிலே குறி பார்க்கிருரே, அவரா?

இளை : (கிண்டலாய்) ஆமாங்க. உங்க அப்பா கிட்டதாங்க அவர் அரசியல் படிச்சாருங்க.

கக் : அப்படியா? எங்கப்பன் அதைப்பற்றிச் சொல்லவே இல்லையே!

பெரி : ஐயா, நீங்க என்ன மந்திரியாயிருக்கீங்க?

கக் : மராமத்து மந்திரிங்க...ஆமா உங்க பக்கத்திலே ரோடு கீடு போட்டிருக்காக?

பெரி : எங்கேங்க? யாராகிலும் மந்திரி கிந்திரி வந்தாத்தானுங்களே, ரோடு போடுவாங்க. காமராசர் போற ஊருக்கெல்லாம் பாதை போடறதாகச் சொன்னுக. சரின்னு நம்பிப் பக்கத்து ஊர்க்காரக ஏற்பாடுபன்னியிருக்காக.

கக் : நீங்க கவலைப்படாதீக! இந்தப் பக்கத்திலே ஏன் ரோடு போடலே, தெரியுமா? எல்லாம் காரணமாத்தான்! ரோடு போட்டா நீங்க அடிக்கடி வண்டி கட்டிக்கிட்டு, சினிமாவுக்குப் போயிடறீங்க. அதனுலேதான் போடலை!

பெரி : சினிமாவாவது? கேப்பைமாவாவது? எங்களுக்கு ஏதுங்க அந்த வாய்ப்பு? தம்பிதான் சொன்னன், இப்ப மந்திரிகளெல்லாம் சினிமாப் பார்க்க, அடிக்கடிப் போறதாக.

கக் : இம்...இம்...அப்படி இல்லீங்க. இப்ப எவ்வளவோ சென்னை முன்னேறியிடுச்சுங்க. இப்போவெல்லாம் தாழ்த்தப்பட்டவங்க வீட்டிலேயும் வெள்ளிப்பாத்திரமுங்க... வெள்ளிப்பாத்திரம்!

பெரி : ஒன்னுரெண்டு பேரு, சாதி பேரைச் சொல்லியும் ஊர் போரைச் சொல்லியும் கொள்ளையடிச்சு, களவாடி அவக வீட்டிலே தங்கம் வெள்ளியை அடுக்கி வைத்துக் கொண்டிருக்கிருங்க.... இன்னு, எல்லார் வீட்டிலேயும் இருப்பதாகவா சொல்றது? உங்க தம்பி...எங்க பயதானுங்க சொன்னன்...உங்க தம்பி கவனிச்சுக்கிற அரிசன விடுதியிலே வந்து படிக்கிற பயனுகள்ளே நூற்றுக்கு நூறு பசங்க, கட்டிக்கக்கூடத் துணியில்லாமே திண்டாடுருனுகளாம்... சரியான சாப்பாடு இல்லாம, ஏதோ, நீங்க போட்டதைத் தின்னுட்டு, சிரங்கு வந்ததைச் சொரிஞ்சிட்டிருக்கானுகளாம்...... நான் சொல்றேன்னு கோபிக்கக் கூடாது. ஐயாவைப் பத்தி கீழுரிலே இப்படி எல்லாம் பேசிக்கிருங்க. அதைத்தான் சொன்னேன்.

கக் : அதெல்லாம் என்னங்க. நாங்கல்லாம் மானம் ரோசம் பார்த்தா மந்திரியா வரமுடியுங்களா?

இளை : அதுதானே கேட்டேன்!

பெரி : அப்படியா? இப்போ பேச்செல்லாம் ரெம்ப முன்னேறியிருக்காமே!

கக் : அப்படி எல்லாம் இல்லீங்க. ஏதோ “மகாத்மா காந்திக்கு சே”ன்னு ஆரம்பிச்சுட்டா, கருத்து தானே வந்திடும், மழை மழையாய்.

இளை : ஐயா! இப்போ கதை எல்லாம் சொல்ருக பிரமாதமா! இவக கதை சொன்னுகன்னு ஊரே மயங்கிடும். அப்படிக் கதை சொல்வாக!

(அந்த நேரத்திலே தற்செயலாக அந்த வழியே வந்த கிழவி ஒருத்தி விவரம் முழுவதையும் விளங்கிக் கொள்ளாமல்)

கிழவி : கதை சொல்றவகளா? அப்ப நம்ம ஊரிலே இன்னைக்குக் கதை சொல்லச் சொல்லுங்க. பாகவதக் கதை சொன்னு ரெம்ப நல்லதுங்க. போற வழிக்காகிலும் புண்ணியம் உண்டு!

இளை : போ பாட்டி, போ! இவர் பாகவதக் கதை எல்லாம் சொல்ல மாட்டாக. உருசியாவிலே ஆண்டலூயி கதை சொல்வாக. அமெரிக்காவிலே ஆண்டுகிட்டிருக்க குருசேவ் கதை சொல்வாக! நெய்வேலியிலே அணை கட்டுற கதையை ரெம்பப் பிரமாதமாச் சொல்வாக! யாராகிலும் “என்னையா! இப்படியா நடந்தது! நடக்குது?” எனக் கேட்டாக்க, “போடா! கதைக்குக் காலா? கையா?” எனச் சுருக்கமாச் சொல்லி அடிச்சிடுவாருங்க!

கிழவி : தெரியாமக் கேட்டுட்டேன் சாமி!

(போகிருள்.)

கக் : யோ! நீங்க எல்லாம் தீமுகாவோ? அகராதித் தனமாய் பேசுறீங்களே! போகுது போகுதுன்னுபாத்தா ரெம்பப் பேசுறீங்களே! எங்க கிட்ட துப்பாக்கியிருக்கு! தெரியுமா!

இளை : குருவி சுடப் போறீங்களா? சுடுங்க! மனிதனே சாகும்போது அதுமட்டும் ஏன் இருக்கணும்?

(நிலைமை மீறுவதைக் கண்ட கக்காச்சாரியார் எதிரே வரும் காரைக் கையாட்டி நிறுத்துகிறார். காரில் வந்த மௌன குரு, “மகன்” படும் பாட்டைப் பார்த்துக் காரை நிறுத்தி இறங்குகிறார். கக்காச்சாரியார் “எங்கப்பனே! காப்பாத்து! இந்த இடத்திலே தெரியாமல் வந்து மாட்டிக்கிட்டேன். தி. மு. காக்காரனுகளாக் கூடி என்னை மடக்கிட்டானுக! அந்தக் கிழவன்கூடக் கருப்புச்சட்டை போலிருக்கு! ஒன்னும் தெரியாதவன்மாதிரி என்னைப் புரட்டிப் புரட்டி எடுக்கிருன்!” என்றவாறே காமராசர் காலில் விழுகிருர். அந்தக்கிழவர் முன்வந்து “ஆமாங்க நான் இந்த ஊர் தி. மு. க. செயலாளனுங்க!” என்கிருர்! கக்காச்சாரியாரும் மௌன குருவும் “ஏ தி. மு. க. ஏ தி. மு. க! ஐயோ தி. மு க!” என்றலறியடித்தவாறே வண்டிக்குள் பாய்கின்றனர். வண்டி பறக்கிறது; கூட்டம் சிரிக்கிறது.)

★★★ இந்த ஓரங்க நாடகம் எவரையாகிலும் குறிப்பிடுவதில்லை. யாரும் தன்னைக் குறிப்பிடுவதாக வந்தால், அதுவும் சரியில்லை. “உண்மையான நிகழ்ச்சிகளின் மேல் எழுந்த கற்பனையா?”-இந்தக் கேள்விக்கும் பதில் எழுதப் போவதில்லை. கேள்விகளுக்குப் பதில் சொல்லிக்கொண்டேயிருந்தால், எனக்கிருக்கும் காலம் போதாது. படித்துப் பாருங்கள்; நிலை இப்படித்தான் என்பதை ஒப்புக்கொள்வீர்கள்!

வந்தார்! போனார்!

காவிரி பாய்ந்து கரும்பும் செந்நெலும்
பூவிரி பொழிலும் மாவொடு தெங்கும்
சூழ்ந்திடும் சோழ மண்டலம் தன்னில்
வாழ்ந்திடும் மறவர் மங்காப் புகழுடன்
வடபேர் இமய மாமலை முகத்தில்
அடுபோர் வென்றியால் ஆண்புலி பொறித்து
கங்கை கொண்டு கடாரமும் வென்று
பொங்கும் ஆர்கலி சூழ்தரு பூதலம்
கொற்ற வெண்குடை நீழலில் கொண்டவர்
செற்றார் ஒழித்த திறன்மிகு வேந்தன்
திண்டோள் மறவன் திருமா வளவன்
கண்டார் வணங்கும் கரிகால் சோழன்
இழிவழி செல்லா இத்தகை மாமன்னர்
வழிவழி வந்த மாண்புடை மாந்தர்
அறங்க னிந்த மறநெஞ் சுடையார்
திறஞ்செ றிந்த செவ்வியர் வாழும்
மண்ணில் ஒருநாள் மாபெரும் திருநாள்!
அண்மையில் நிகழ்ந்தது! அறிவுளோர் காண்மினோ!
தஞ்சைத் தரணியில் அஞ்சுவது அஞ்சா
நெஞ்சக் காம ராசர் நினைத்தார்
நாமோர் சுற்றுப் பயணம் நடத்தி
தீமுக் கழகம் சிதறிப் பொடிபட
நாவாரப் பேசி நசுக்கி அதனைக்
காவேரி நீரில் கரைப்போம் என்றே
பாவ நாசம் எனும்பழ நகரில்
ஏவ லாளர் எடுபிடி சூழ்தர
உலவினர் பூண்டி வாண்டையார் உடன்வர
இலகு சாமரம் வடபாதி இரட்டிட
நிலத்தின் கிழவர்கள் நிரைநிரை யாய்வர
வலத்தில் இடத்தில் மாநகர்க் காவலர்
ஆயுதம் ஏந்தி அணிஅணி யாய்வர
† ஆய்தம் அன்ன அறிவுடை யார்சிலர்
சூழ நின்று துதிமொழி பகர்ந்திட
வாழ வகையிலா மக்கட் கூட்டம்
கண்ணீர் வடித்துக் கதறி ஒதுங்கிடத்
தண்ணீர் தேக்கும் தகைமை ஒப்பப்
பேழையில் தேக்கிய பெரும்பணக் காரர்கள்
'வாழிய எம்மான்!' எனவாழ்த்து எடுக்க
ஆலை அரசர்கள் அடைப்பம் தாங்க
மாலை ஏந்திய மாளிகை வாசிகள்
புடைசூழ்ந் துவர பூமான் கபித்தலம்
குடையை ஏந்திக் கூடவே வந்திட
தொண்டர் என்னும் துணைப்பெயர் தாங்கிய
கண்டகர் சிலரும் கவினுற வந்தார்
"மாபெரும் கூட்டம்! மாபெரும் கூட்டம்!
யாவரும் வம்மின்! யாவரும் வம்மின்!
விருதை தந்த வீராதி வீரன்
வருகை தந்தான்! வாரீர்! வாரீர்!
ஏங்கிய மக்களே! எழுந்து வாரீர்!
காங்கிர சாட்சியின் காவலன் காணீர்!
தீவலம் செய்து திருமணங் கொள்ளான்!
பூவர செய்திய புதிய வீடுமன்!
காம ராசர் கனிவுடன் வந்தார்;

† ஆய்தம் = ஃ

ஊமை ராசர் என்றுபொய் உரைத்தவர்
தாமே நாணித் தற்கொலை புரிந்திட
நாமா மழைபெயும்; நனைந்திட வாரீர்!
கல்லூரி காணுக் கலைபயிலா நின்ற
சொல்லேர் உழவன் தொண்டரில் தொண்டன்
பேழை காக்கும் பெரும்பணக் காரரை
ஏழை யாக்கும் ஏழைபங் காளன்
ஆண்மை யாளன்! அன்பால் எளியவன்
கேண்மை யாளன்! கெழுதகை! வள்ளல்!
சோழ மண்டலத் தொல்குடி மக்காள்!
சூழும் வெந்துயர் துடைக்க வந்துளான்!
காண்மின்! வாய்மொழி கேண்மின் கடிதே!
நாண்மீன் போல நனிமிகச் சூழுமின்!"
என்று பலவாறு இயம்பி அறிக்கைகள்
மன்று தோறும் மனையிடந் தோறும்
ஒட்டியும் உதறியும் ஓயா விளம்பரம்
குட்டித் தொண்டர்கள் குறையறச் செய்தனர்!

ஜூலை 3-ல்
வெளியாகிறது

SUNDAY TIMES

ஆசிரியர்:
ஈ. வே. கி. சம்பத்
எம். பி.

டெம்மி அளவில் பக்கங்கள் எட்டு. | தனி இதழ் காசுகள் 15.

விவரங்கட்கு:

பொறுப்பாளர்,
சண்டே டைம்ஸ்,
சென்னை - 6.

—ஆங்கே

காம ராசர் கவினுறு குடுமிபோல்
பாப நாச மக்கள் பதின்மரும்
குண்டர் தொண்டர் கூலிகள் சிலரும்
தண்டல் தலைவர் தலையில் இரும்புச்
சட்டி கவிழ்த்த காக்கிச் சட்டையர்
பட்டி முழங்கால் படமிகத் தொங்கும்
கதர்ச்சொக் காயால் கனவான் ஆகிய
மதர்த்த பார்வையர் மற்றும் சிலரும்
பீட ழிந்த பிறைவடி வாகக்
கூடி நின்றனர் மாபெரும் கூட்டம்!
காம ராசரின் கைப்புறம் வந்த
'ஆமா' ராசர்கள் அனைவரும் ஆங்கே
விண்ணிடை விளங்கும் வெள்ளியாம் கோளை
மண்ணிடைக் கொணர்ந்த மாட்சிமை போல
மின்னுயர் ஆற்றல் விளக்குகள் தூக்கிய
பொன்னவிர் மேடையில் போந்தனர்! உடனே
தருண தந்திரம் தலைமை வகித்தார்
கருணை முகிலாம் காம ராசர்
உரும்ஏறு அனைய ஒலிப ரப்பிமுன்
திருவாய் திறந்து சிந்தினர் மணிமொழி!

—என்னவென்றால்

"நாட்டு மக்களே! நல்லறி வாளரே!
கூட்டம் சிறிதெனக் குறைப்பட வேண்டாம்!
'வாக்கு' நமக்கே வழங்குவர் மக்கள்!
ஊக்கம் கொண்டே உழைப்போம் நாமே!
வடக்கு மிகவும் வளர்ந்து தெற்கை
அடக்குது என்பார் அறிவிலார் சிலரே!
நம்ப வேண்டாம்! நம்ப வேண்டாம்!
வம்பர் அவர்சொலை நம்ப வேண்டாம்!
நாடக மாடுவார் நாடாள் வாரா?
ஏடுகள் எழுதுவார் எதற்கா வார்கள்?
தேர்தலில் வென்று சென்னை ஆட்சியில்
யார்வர முடியுமோ வரலாம்! ஆனால்
சேர நாட்டில் செம்மாந்து கிடந்து
சோரம் போனதால் தூங்க மாட்டோம்!
வானம் உள்ளளவும் மண்ணுள்ள அளவும்
ஆன மட்டும் அரசாட்சி செய்வோம்
"வறுமை மலிந்தது வாழ்க்கை கசந்தது
சிறுமை மலிந்தது சீர்கே டுற்றது
காங்கிர சாட்சியால் கண்ட பயனிதே
தாங்க முடியாமல் தவிக்கிறோம்" என்றே
சொல்பவர் எல்லாரும் சுத்தப் புரட்டர்கள்!!
நல்லவர் காந்தியார்; அடியவர் நாங்கள்
காந்தியார் பெயரால் கபடும்செய் வோமா?
ஏந்தி எங்களை ஏற்க வேண்டும்!
நாடாள என்றே நாங்கள் பிறந்துளோம்!
கேடான வெள்ளையன் ஓட விரட்டினோம்
யாராரோ ஆளவா இத்தனை செய்தோம்?
போராடிப் பட்ட புண்என்ன கொஞ்சமா?
தீமுக் கழகமாம்! திராவிட நாடாம்!
ஏமாற்று வார்கள்! எங்கே திராவிடம்?
எங்கள் ஆட்சியே துயருளது என்றால்
பொங்குமோ அவர்கள் பூமியை ஆண்டால்?
வருகிற தேர்தலில் மனது மகிழ்ச்சியாய்
தருகிற காசைத் தங்கமாய் மதித்து
மாட்டுச் சின்னம் மறந்துவி டாமல்
ஓட்டுப் போட்டே உவப்புடன் இருங்கள்.
நாட்டை ஆள்பவர் நாங்கள்தான் என்றுமே;
ஓட்டுப் போடுதல் உங்கள் பொறுப்பு.
சில்லறைத் தேவையைத் தேர்தலில் தருவோம்.
தொல்லைகள் வளர்ந்தால் கடவுளே துடைப்பார்.
நாத்திகர் சொற்களைக் கேட்டே நாட்டைக்
கூத்துகள் ஆடக் கொடுத்துக் கெடாதீர்!"
என்று பலவிதம் எடுத்துக் கூறினர்
பன்றிகள் சிலவே நின்று கேட்டன.
வந்தே மாதர வாழ்த்துடன் முடித்தாரே!

—அருப்புக்கோட்டை
மா. ச. இராமசாமி.

...தஞ்சைத் தரணியில் விருதைக்
கோமான் பவனி வந்து
போன கதை...

அழுகை

மனிதன் ஏன் சிறந்தவன்?

அவனுக்கு மனம் என்று ஒன்றிருக்கின்றதனால்.

அப்படியென்றால், சிரிப்பவன் சினப்பதும் சினந்தவன் அழுவதும் எல்லாம் இம்மனத்தின் செயல்தானே?

ஆமாம், இதில் எள்ளளவும் ஐயமில்லை. விலங்கினம் சிரிப்பதுமில்லை; தன்னியல்பாய் எண்ணி உளமுருகி அழுவதுமில்லை. இயற்கையில் ஏற்பட்ட பழக்க உணர்ச்சியால் உந்தப்பட்டே வாழ்கின்றன. அவைகளுக்கு மனம் என்று ஒன்றில்லை.

சரி, ஒருபோது ஒரு நிலையில் ஒரு வகை எண்ணம் எழுகிறது. அவ்வெண்ணம் மறுபோது மற்றொரு நிலையிலே மாய்கிறது. அங்கு ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புதற்கு வேறொரு புதிய எண்ணம் புகுகிறது. இப்படி மாறி மாறி எண்ணம் எழுவதும் அழிவதும் இம்மனத்தின் இயல்புதானே?

உண்மை. ஒரு முறை பிறந்தவன் ஒரு முறைதான் இறக்கிறான் என்பது பருமை உணர்வு. மிக நுண்மையாய் உணர்ந்தால், பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில் ஒருவன் நூறாயிரம் முறை செத்துச் செத்துப் பிழைக்கிறான். ஒரு கருத்துப் பிறக்கும்போது அவனும் பிறக்கிறான்; அஃது இறக்கின்றவேளை அவனும் இறக்கின்றான். மற்றொன்று துளிர்க்கையிலே மறுபடி அவன் பிறவியெடுக்கிறான். எல்லாம் இம்மனத்தின் இயல்பேயன்றி வேறில்லை.

இவள் அன்னையென்றும், உடன் பிறந்தாள் இவளென்றும், உளம் கவர்ந்தவள் இவளென்றும் பகுத்துணர்ந்து பழகுகின்றோம். அன்னை மகனே என்னும்போதும், உடன்பிறந்தவள் அண்ணா என்றழைக்கையிலும். இன்னுயிரன்னவள் அன்பே என என்புருகக் குழைகின்ற வேளையும் நாம் பெரு மகிழ்வு எய்துகிறோம்; பெருமை உறுகிறோம்; நம்மையே மறந்துவிடுகிறோம். மனம் இல்லையெனில் இவையனைத்தும் இல்லையல்லவா?

மாறுபாடில்லாத உண்மை. மனம் இல்லையாகில் இனம் இல்லை; உறவு இல்லை; பெருமை இல்லை; பிற யாவுமே இல்லை. மனிதன் உயர்திணையாதல் இதனாலேதான்.

ஒப்புகிறேன். ஆனால் ஒன்று: ஈன்றெடுத்த அன்னை இவ்வுலகுவிட்டு ஏகிவிடின் ஆற்றாது அழுகின்றோம்; உடன் பிறந்த தங்கை கட்டிய கணவன் வீடு செல்லல் வேண்டி இரங்கி நிற்க, நம் கண்களில் நீர் முட்டித் துளிர்க்கின்றது; அன்பே இன்பமே என்று ஆயிர முறை அழைத்து அகங்குளிர்வித்தவள் கைவிடுகையில் உலகே மாயம் என்று. உள்ளம் வெறுப்பின் எல்லைக்கே ஓடிவிடுகிறது. மக்களுக்கு மனம் என்று ஒன்றில்லாதொழியின் வாழ்வில் துன்பமுமில்லை; தோல்வியுமில்லையல்லவா?

தவறு. துன்பத்திலும் தோல்வியிலும் தோய்ந்து தோய்ந்து தெளியாதவரை வாழ்க்கையில் உண்மை மக்களுக்குப் புலனாதலில்லை. மனத்தைப் பற்றி இவ்வளவும் நீ எப்போது எண்ணுகின்றாய்? துன்பமும் தோல்வியும் உன்னைத் தொட்டணைக்கின்ற வேளையேயல்லவா? உலகியலில் உண்மையும் வாழ்க்கையில் தெளிவும் மக்களுக்குத் தேவையென்றால் துன்பமும் தோல்வியுமே அன்றித் துணை வேறில்லை.

இருக்கலாம். துன்பமும் தோல்வியும் என்னை இறுகப் பற்றி அணைக்கும் போது நான் ஆற்றாது அழுகின்றேன். அப்போது உலகம் என்னை ஆற்றலற்றவன்; கோழை என்றல்லவா எண்ணும்?

முற்றும் பொருந்தாப் போலி எண்ணம் இது. உலகம் உன்னை ஒருபோதும் அவ்வாறு எண்ணாது. அவ்வாறு எண்ணின் உண்மையில் அதுதான் கோழைமையுடையதாகும். ஏனெனில் அவ்வுலகம் அறிந்தோ அறியாமலோ தானும் மறைவாக நின்று அழுகின்றதென்பதனை நீ மறந்துவிடல் கூடாது. அழுகை கோழையின் செயல் என்று நினைக்கின்றாயே! களம்பல கண்டு, பகைப்புலம் அடக்கும் வீரனுக்கு அழவே தெரியாது என்பதுதான் உன் எண்ணமா? அஞ்சாமையும் ஆண்மையும் உடையான் அழ மறந்தவன் என்பதுவோ உன் கருத்து?

இல்லை, இல்லை. ஆனால் ஆற்றலற்றவன்தான் அழுகையை அடைக்கலமாய் நாடி அடைவான் என்று உலகம் உரைத்தல் கூடுமே! அதனை எண்ணி அடங்குகிறேன் நான்!

பைத்தியக்காரன். இனிஅவ்வாறெல்லாம் பொங்கத் துடிக்கும் கண்ணீருக்கு அணையிடாதே! தங்கு தடையின்றி மனம்விட்டு அழுது புலம்பி அடங்கு; அடக்காதே. நாகரிகம் வேண்டின் ஒரு தனியாய்த் தேடிச் சென்று யாரும் காணாதவாறுதல், கண்ணீர் விட்டுக் கலங்கி அழுதபின் மனச் சுமை நீங்கி வேறு பணிகளில் ஈடுபடு. உண்மையே உரைக்கின்றேன். துன்பமும் தோல்வியும் விளைத்த துயரைத் துடைக்கவல்ல ஒரே துணை அழுகை என்பதனை உன் நெஞ்சில் ஆடிப் பதித்துக்கொள். நல்ல பெண்மணிகளிடம் இதற்கான தக்க பாடம் கற்றுக்கொள். துன்பத்தையும் தோல்வியையும் பெண்கள் கண்ணீர் வடித்தே கரைத்துவிடுகின்றனர். நீ அவர்களிடம் வேறெதையும் கற்க வேண்டாம். அழக் கற்பாயாக. கற்பின் உனக்கு வாழ்க்கையில் துன்பமே இல்லை; தோல்வியே இல்லை. இன்பமே எந்நாளும். இன்னொன்றும் கேள்; அழுகையின் ஆற்றலை அறியாது நீ அழுகையை அநாகரிகம் என்று அடக்கி முடக்கி அழுத்திவிடின், மிகக் கொடிய வயிற்று வலி உன் ஆயுளை விழுங்கிவிடும். பெரும்பான்மை வயிற்றுத் தொல்லைகள், துன்பத்தையும் தோல்வியையும் அழுது புலம்பி அறவே அழித்தொழிக்கத் தெரியாமல் வருந்தினவர்களிடமே பெருகியிருக்கின்றன. எனவே நீ நன்றாக அழு. அழத் தோன்றும் போதெல்லாம் அழு. மனச்சுமை அறவே தீருமட்டும் அழு. கண்ணீர் வறள அழு! நீ புதிய மனிதனாவாய். வேண்டுமாயின் உலகில் அறிவுடைமை, ஆற்றல், அஞ்சாமை பெற்று உயர்ந்த பெரியவர்களின் வாழ்க்கையினை உற்றறிந்து தெளி. அழ மறவாதே. என்றும் அழுகை கோழையின் செயலல்ல. குழந்தைமையின் அமைதி அதிலுண்டு; அழுவாய்!

—அறவாழி.

வாழ்த்து!

★

ஓராண்டா? இல்லை! இல்லை! ஆறாண்டுகள் நீயும் ஓயாது செந்தமிழுக்குத் தொண்டு செய்தாய்!

ஒன்றா? இரண்டா? ஆயிரம்! ஆயிரம்! பாருள்ளார் எல்லாரும் பயன்பெற்றுத் திளைக்க, பன்மொழி வல்லவர் பதில் தந்தார்! பல கவியரங்கங்கள் தந்தாய்! கொள்கைகளின் விளக்கங்களைப் பொழிந்தாய்! உலகம் களிப்புற இத்தகைய எண்ணற்ற தொண்டுகள் ஆற்றிய பண்புள்ள பத்திரிகை, நீயே! நீ வாழ்க! நீடு வாழ்க!

—மா. நக்கீரன், கீழையூர்.



★

காலத்தை வெல்லும் கழகத் தென்றலே! கவிதைத் தென்றலே! நீ என்றும் வாழி!

—கா. பொ. இளம்வழுதி

உயிரோட்டம்

அன்புள்ள நண்பா,

உலக வாழ்க்கையின் முடிவு எப்போது என்பதை யாரும் இது வரை அறியவில்லை. இன்றோ, நாளையோ என்று இருப்பவன் சாவிலிருந்து மீண்டுவிடுகிறான். நன்றாக உடற்கட்டோடு இருப்பவன் திடீரென இறந்துவிடுகிறான். இவையெல்லாம் உலகின் சர்வ சாதாரண நிகழ்ச்சிகள்தான். ஆனால் ஒருசிலர், வாழமுடியாது என்று தெரிந்தும் சாகாமல் இருக்கிறார்கள் - என்னைப் போல்! இதுபோன்ற பயங்கரத்தை நினைக்கக்கூட அருவருப்பாக இருக்கும் உனக்கெல்லாம்!

உலகத்தில் நடமாட, உடலும் உடல் இயங்க உயிரும் தேவையல்லவா? சில சமயங்களில் உயிர் பிரிந்தபின் உடல் அழிக்கப்படுகிறது. சில சமயங்களில் உடல் அழிவதனால் உயிர் பிரிகிறது. அப்படியானால் உலகத்தில் ஆக்கபபடும் ஆற்றலைத் தருகின்ற அறிவு வெறும் அழியும் உடல் சம்பந்தப்பட்டதுதானா? உயிரோடு அதற்குத் தொடர்பில்லையா?

சாகப்போகிற நேரத்தில் ஏதேதோ பிதற்றுகிறான் என்பாய். என்ன செய்வது? சாவு எனக்குத் தெரிந்தே வருகிறது அதனால் என்னேரமும் என் சிந்தனை,வாழ்வையும் சாவையும் சுற்றிச் சுற்றி வருகிறது.

நடமாட முடியாதபடி உடலை ஒரு நோய் பீடித்துக்கொண்டு தின்று வருகிறது. ஒருவேளை இது தீருமென்ற நம்பிக்கை இருந்தாலும் சமாளித்து எதிர்த்துப் பார்க்கலாம். அதுவும் இல்லை. தீராத வியாதி. யாராவது வந்து அன்போடு உதவி செய்ய நினைத்தாலும், தொற்றுநோய் பயங்கரத்தால் அவர்களுடைய உடல் என்னை நெருங்கவும் பயப்படுகிறது.

என்னுயிரைப் பலவந்தமாகப் போக்கிக்கொள்ளவும் ஆற்றலின்றி, என்னுடலை அணு அணுவாக அரித்து வரும் நோயைத் தடுக்கவும் ஆற்றலின்றி, நான் ஊருக்குப் புறமாகப் பாழடைந்த வீட்டில், உடைந்த கட்டிலில், படுத்துக்கொண்டிருக்கிறேன். ஏதோ சிறிது மன அமைதிக்காக, எனக்குத் தோன்றியதை உனக்கு எழுதுகிறேன். இந்தத் தாளைக் கையினால் தொடக்கூட, ஒருவேளை நீ அஞ்சலாம்!

உயிர்மேல் உனக்கு ஆசை. தப்பு; உடல்மேல் உனக்கு ஆசை. உயிர்மேல் கண்ணும் கருத்துமாகக் கவனிப்புடன் நீ இருந்தாலும், அதைப் பாதுகாக்கும் திறன் உனக்கு இல்லை. உடல் இல்லாமல் அதனால் பயனும் இல்லை. ஆகவே நீ உடலைப் பாதுகாத்துக்கொள்வதில் என்ன தவறு? இந்தக் கடிதத்தைப் படித்தவுடன், இதை நீ கொளுத்திவிடு. பிறகு உன் கையை சோப்புப் போட்டுக் கழுவிக்கொள். அதோடு, எனக்கு ஒரு நாலுவரி எழுது. எனக்கு அது மாளாத அமைதியளிக்கும்.

இப்படிக்கு,

அருணன்.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: இராம. கிருட்டினன், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு. தொலைபேசி எண் 83510.